# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௯௫ | மலர் |
| --- | --- | --- |
| | குரோதி, வைகாசி. | |
| ௪௰ | 1964 மே, ஜூன். | ௨. |


## "பாவேந்தர் பாரதிதாசன்"

ச. பாலசுந்தரம்

"தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என்
தாய்தடுத்தாலும் விடேன்" (பாரதிதாசன்-இசையமுது)

வெல்லுந் தமிழ்மொழிக்கிங் கில்லை நிகரென்னும்
சொல்லை உணர்த்தி உணர்ச்சி முடிதாங்கி
மல்லல் நிறைந்து வளமோங்கும் மாக்கவிதைச்
செங்கோலை ஏந்திச் செந்தமிழ்க்கு வாழ்வூட்டிச்
சங்கு முழங்கித் தனிமுரசார்த் தெங்கெங்கும்
அச்சாமல் நாடோறும் செஞ்சொல்லால் ஆட்சிசெய்த
பாவேந்தே! உன்றன் நாவேந்து சொல்லம்பால்
புன்மை விளைத்தாழ்ந்த பொய்மை பரப்பிநின்ற
வேண்டாத கற்பனைகள் வீறிட்டலறிப்
புறங்காட்டி ஓடப், புழுத்த சமுதாயப்
பொய்ஒழுக்கம் மாய்த்துப், புரையோடித் துன்புசெய்யும்
சாதிமதச்சடங்கு சாத்திரங்கள் என்னும்
சழக்கு வழக்கமெலாம கால்தளர்ந்து தள்ளாட
வாகை புனைந்தாய் வளர்ந்த சமுதாயச்
சோகைப் பிணியையுன் சொல்லமிழ்த நன்மருந்தால்
மாற்றி உணர்வூட்டி வண்டமிழ்ப்பாச் சோலையிலே
மண்டிவளர்ந்த புதர்களைந்து வன்மையொடு
பற்றிப் படர்ந்து பழமரபை மூடி எங்கும்
சுற்றி வளர்ந்த கொடிநீக்கித் தண்டமிழாம்
பால்மரத்தை எல்லோரும் பார்த்துப் பயன்கொள்ள
நூல் செய்தசொல்லேருழவா! உன் நோக்கமைந்த
செஞ்சொற் கவிதைச் செழித்து வளர்வதையாம்
கண்டு மனமகிழுங் காலத்தில் எம்மைவிட்டுப்

போகவுள்ங் கொண்டனையே! புரட்சிக் கவியரசே!
நான்மறையை நாம்புதுக்கி நல்ல சமுதாயம்
காண்போம் எனக்கழன்ற பாரதியார் கண்டு
விதைத்த நறுவிதையாய் வீறோ டெழுந்து
புதுமைத் தளிர்விட்டுப் புரட்சி மலர்பூத்துச்
சீரார்ந்த சிந்தனையாம் செம்மைக் கிளைபெருகி

மல்லற் கனிபழுத்து மறுமலர்ச்சிப் பாவாம்
விழுதிறங்கி வேரூன்றச் செய்தபெருங் கற்பகமே!
தாய்மரமாய் நின்று தழைத்த தமிழ்க் காவே!
போய் மறைந்தாய் எங்கட்குன் பூதவுடல் காட்டாமல்
உள்ளங் குமுற உடலதிர நெக்குருகி
வெள்ளம்போற் கண்ணீர் விரைகின்ற தையா! உன்
சிங்கம்போல் நோக்கும் செம்மாந்த நல்வடிவை
எங்கினிமேற் காண்போம்—இடியே றெனமுழங்கி
இன்றமிழின் சீர்பேசும் பொன்மொழியை யாரிடத்துக்
கேட்டுச் செவிகுளிர் வோம்-சிந்தனையையாம் வளர்க்கப்

பாட்டாகப் பேசிவந்த பாரதிதாசப் பெரியோய்
கொஞ்சுங் குழந்தைஉளக் கோமகனே! கூடுநண்பர்
நெஞ்சங் குழைவிக்கும் நேரியனே! அஞ்சாப்
புரட்சிஒளி வீசும் புலமைப் பெருஞ்சுடரே!
கற்பனையில் உண்மையொளி காலும் பெருநிலவே!
சிற்பமெனக் காட்டுஞ் செஞ்சொற் கவிமன்னா!
பல்லாயிரவர் பரிதவிக்கச் சென்றாய் உன்
வெல்மனமும் நல்மனமும் அன்றியிந்தக் கல்மனத்தை
எந்நாளும் கண்டதில் எவ்வா றெமைப்பிரிந்தாய்?
என்னபிழை செய்தோம்? கன்னித் தமிழ் வருந்த

பொன்னகரம் சென்றாய்! புகழுருவை இங்கிருத்தி
அந்தோ கவியரசே! ஆண்மைப் பனிமலையே!
சங்கத் தமிழ்க்கவிஞர் தன்மையினை மட்டுமன்றி
அங்கவர்தம் ஆற்றல் அருமைத் திருவுடம்பு
பொங்குதமிழுணர்வு யாவும் புரட்சியொடு
அப்படியே கண்டெம் அகமகிழுங் காலத்தில்
காலன் கனிவுரையால் குரல்தாக்கித் தானழைக்க
ஆலத்தை எம்செவியில் வார்த்தகன்றாய் அந்தோ
எமனும் உனக்கெதிரே எவ்வாறு வந்தானோ?
செஞ்சொற் கவிகேட்கக் கெஞ்சி அழைத்தானோ

நாடு துயர்கூரக் கேடுசெய்து விட்டானே!
முத்தமிழ்க்குந் தொண்டு முடிதாங் கச்செய்தபெரும்
வித்தகனே நீயிங் குளதாகுஞ் சாக்காட்டை
செய்துமறைந்தாய் உன் பொய்தீர் கவிதைகளில்

# உணர்வு மலர்ச்சி

## புலவர் திரு. நா. அறிவுஒளி

தெளிவற்ற கருத்துக்களைத் 'தெளிவுள்ள கொள்கைகள்' போலப் போலியாகக் கூறி 'அரசியல் வாணிகம்' செய்வோர் தமிழகத்தில் மண்டிவிட்டனரே! என்னருமை வளமார் தமிழகமே, அதிகமான் நெடுமான் அஞ்சியையும், கரிகால் திருமாவளவனையும், நலங்கிள்ளியையும், பாண்டியன் நெடுஞ் செழியனையும், பரணரையும், அவ்வையாரையும், கோவூர் கிழாரையும், மாமூலனாரையும், திதியனையும், நன்னனையும்... இன்னும் இவரனைய ஆற்றல் கெழுமிய அரசியலாளர்களையும், ஒப்புயர் வற்ற அரசியல் திருநூலான திருவள்ளுவரின் திருக்குறளையும், வனப்பார் புறநானூற்றையும், புறப்பொருள் வெண்பா மாலையையும், பதிற்றுப்பத்தையும் பெற்ற தமிழகமே! போலி அரசியலாளர்கள் என்ற நெருஞ்சிக் காட்டால் நீ அடர்ந்து மாசுற்ற இழிநிலையை என்னென்பேன்!

தமிழரின் அறிவுநலமும், அரசியல் அமைதியும் சிதையும் வகைகள் பெருகிவருவது கண்டு பெரிதும் ஆற்றாமைப்பட்டு நைகிறேன். உண்மை தெளியும் உணர்வில்லாதாராகத் தமிழ்ப் பெருங்குடியினர் சிதையக்காரணம் நல்லறிவு வளர்ச்சியும், ஆராய்ச்சி உளப்பான்மையும் நாட்டில் செழிக்காமையே என்பதையும் மக்கள் உணரவேண்டும்.

தமிழ்மக்கள் வெறியுணர்ச்சிக்கு மதிமயங்கும் அளவுக்கு நெறியுணர்ச்சிக்கு ஆட்படும் நிலை வந்தால் தவிர இச்சிக்கல் தீர்வது அரிதே.

வேலியிட்டுக் கொள்ளாமலும், விலங்கு பூட்டிக் கொள்ளாமலும் எண்ணும் ஆற்றல் மக்களிடம் வளர வேண்டும். அத்துறையில் சிறப்போடு ஊக்கி விடக்கூடிய பெருந் தகையினர் தொண்டும் சிறக்க வேண்டும். எண்ணம் சிறந்தால் எழுத்தும் பேச்சும் சிறக்கும்; அறிவு செழிக்கும்.

---

வாழ்கின்றாய் அனாலும் வாய்மொழியைக் கேட்டுவக்கும்
ஊழ்குறைவிற் குள்ளம் உளைந்து தடுமாறிச்
சூழ்கின்றோம் உன்றுணையைச் சொற்கோவே எம்துயரம்
மாற்றி இனியஉன தாற்றல் வரச்செய்வாய்
தோற்றலின் ஆற்றல் தலைப்பட்டாய் நின்புகழை
வாழ்த்தி வணங்கி வண்டமிழ்த் தாய்க்குன் வழியே
பொய்யாத தொண்டு புரட்சிக் கவியாலே
செய்துயர்ந்த நிற்குந் திறமெல்லாம் இப்பொழுதே
ஐயா அருள்க அமர்ந்து!

அறிவுச்செழிப்பே அனைத்து நலன்கட்கும் ஆணிவேராம். பள்ளிகள் பெருகுவதால் மட்டும் அறிவுடைமை வளர்ந்து விடாது. கல்வி வேறு; அறிவு வேறு. மடமை மாய்ந்து மாண்பு செழித்தால்தான் மன்பதை, கல்வியால் நற்பயன் எய்தும். இன்றேல் கல்விபரவினுல்கூடப் பயன் விளையாது. அறிவியல் எண்ண மலர்ச்சிதான் சிறப்பான ஆய்வுணர்ச்சியைத்தூண்டி வளர்க்கும்.

மக்களுக்கு அரசியல் துறையில் உண்மையான மதிப்பு நேற்றுமில்லை; 'மக்களாட்சி, எனக்குறிக்கப்படும் இன்றும் இல்லை; நாளையும் இந்நிலையா நீடிப்பது? இந்த மக்களுக்கு மதிப்பில்லா நிலை' நன்மை பயக்குமா ?—இப்படி எண்ணிப் பார்க்க முற்பட்டால், அப்போது நாம் வாழுங் காலம், அரசியல் — இலக்கியம் — கலை — பண்பாட்டுத் துறைகளில் எவ்வளவு இன்றியமையாததும் மிகக்கடினமானதுமான பெரிய முயற்சிகள் செய்ய வேண்டிய பருவம் என்பதை அறியமுடியும்.

இன்றைய அரசமைப்பு, அரசியற் கொள்கைகள் ஏட்டளவில் மக்களை மகிழ்விப்பனவாக வுள்ளன. உண்மையில் மக்களை மதித்துப் பேணுவதாகச் செயற்படவில்லை. பல மக்களைப் பல காரணங்களால் பயன்படுத்திக் கொண்டு, சிலர் (அரசியற் புல்லுருவிகள்) வளர்ந்து செழித்து ஆக்கமும் ஆற்றலும் அதிகாரமும் செல்வாக்கும் சிறப்பும் பெறுகின்றனர். இவர்களை வீழ்த்த முடியாத நிலையில் அறியாமக்களும், தெளியா அரசியலியக்கமும், புரியா அரசியற்கொள்கைகளும், முரண் மனப்பான்மைகளும் அமைந்துள்ளன.

இந்நிலையை மாற்றியமைக்கப் பேராண்மையும் பெருமேதையும் சான்ற அரசியலறிஞர்களின் அரசியற்றொண்டும், அவர்கள் உழைப்பையும் நற்கொள்கைகளையும் பரப்புதற்குரிய இலக்கிய—கலை—அறிவுப்பணியும் சிறக்க வேண்டும்.

அக ஆற்றல்களான கலை—இலக்கிய—மரபுத்துறைகள் தான் இவ்வெழிலார் அரசியல்விழிப்பை—அரசப் புதுப் பிறவியை—மலரச்செய்ய முடியும். அரசியற்கயமைகளை வீழ்த்தினுலொழிய அரசியற்புதுமை மலரவே மலராது. வரலாற்றின் தவறுகளைக் கலை—இலக்கிய—பண்பாட்டுப் பணிகளே திருத்தி நிறைவாக்க வேண்டும்.

அரசியலின் இயக்கத்தில் பண்பும் உண்மையும் நன்முறையில் அமைந்தால்தான் உலகில் அமைதியும், மக்களுக்கு அகப்புற ஆறுதலும் செம்மைவாழ்க்கையும் நிலைபெறும். பண்புள்ளமன்பதையின் மலர்ச்சி பண்புள்ள அறிவெழுச்சியால்தான் உருவாகும். அரசியலைச் சீர்திருத்தும் பகுத்தறிவுச் சான்றோர்களும், அன்னார்தம் ஒப்பற்ற நற்றொண்டு

களுமே இன்றைக்கு நனி இன்றியமையாத வேண்டுகை யாகும்.

தெளிவான அறிவுநிலை, உயரிய கொள்கையைப் போற்றிக் கடைப்பிடிக்கும் வாழ்க்கைநிலை இவை இரண்டுமே இனி மக்களுக்கு வேண்டியவை. நல்லோர் இவ்வளர்ச்சிப் பண்பினை உருவாக்கவே பாடுபடவேண்டும். இந்நாட்டுக்கு மட்டுமின்றி, எல்லா நாட்டுக்கும் இவ்வளர்ச்சிநிலைப் பண்புவேண்டும். ஆகவே பண்பருளும் 'உலக இயக்கம்' ஒன்று தொண்டு செய்ய முற்படின்; அது மிகப்பாராட்டி வரவேற்கத்தக்க தாகும்.

உழைப்பு, முன்னேறுவதற்கு உயர்நிலை வேண்டுகை. ஆயின், எத்தனை உழைப்பாளிகள் களைகணின்றி வாழ்ந்து வீழ்கின்றனர்! எத்துணைத் தொழிலாளிகளின் வாழ்க்கைமுடிவு கருதுவாரற்ற இரங்கத்தக்க நிலையிலுள்ளது! இதையெல் லாம் எண்ணிப் பார்க்கும்போது, மன்பதையமைப்பில் உள்ள குறைபாடு (குறைபாடா? அன்றிக் குழப்பமா?) அல்லது வேறு எதுவோ—நமக்குப்புரிகிறது. அதாவது மக்களுக்கு, மக்கள் தன்மையும், மாந்தரான உணர்வும், மக்களுறவுப் பண்பாட் டன்பும் அரும்பவேயில்லை என்பதை இந்நிலை மெய்ப் பிக்கிறது. ஏழையர் இரங்கத்தக்க உழைப்பாளர்க்கு இரக் கமும் அன்பும் காட்டி உதவுவதைச் சுட்டிக்காட்டி, அவர்கள் பால் மக்கள் தன்மை இருக்கிறதே?' என்று வினவலாம். ஆம் அத்தகையோரிடம் ஓரளவு இப்பண்புள்ளது உண்மையே. ஆயின், பெரும்பாலோர்க்கு மக்களுணர் வெழுச்சி போதியஅளவு அரும்பவே இல்லை. ஒருபயன்கருதி அன்பு பாராட்டுவதும் இரக்கம் காட்டுவதும்தான் வழக்காறாக உள்ளதே தவிர; உண்மையிரக்கமாக, உண்மையுணர்வு உருக்கமாக, உண்மையன்புப் பெருக்கமாக அமையும் உள்ளப்பண்பாடு உருவாகவில்லை. இம்மன்பதையமைப்பின் முழுமுதல் நோக்கமென்ன? என்பதையறிந்தால் மக்கள் தெளிவோடு வாழ்வர் என்பது திண்ணம்.

நம்மருகிருந்து துன்பக்குரல் எழுப்பி அழுது கவல்கின்ற உயிரின்பால் அருளிரக்கம் கொண்டு உதவாத மக்கட்பிறவு உண்மையான உயர்குணப்பிறவிதானா? நினைந்து நினைந்து அறிஞர்பலர் வல்லுணர்வினராக நெஞ்சு நெகிழ்கிறேன். உவந்து வாழ்கின்ற வியப்புகண்டு திகைப்பே விஞ்சுகிறது.

மாற்றார் துன்பத்தை நன்கறிந்தும், அதைத்தீர்த்து வைக்கும் திறமின்றி இருக்கும் நிலைமிக இரங்கற்குரியதே.

நினைக்கும் ஆற்றல் உள்ளச் சான்று மரத்துப் போகாமல் காக்க உதவுகிறது. இது போற்றற்குரிய நிலையே. உலக உணர்வை நம்பி வளர்ந்துவரும் என்னகம் மாநிலத்து

# இலக்கணமும் மரபும்

ச. செந்தில் நாதன்

ஒரு மொழியில் பிறமொழியின் உறவோ அன்றி 'ஆதிக்கமோ' ஏற்படுகின்றபோது, அம்மொழி சில மாறுதல்களைப் பெறுவது இயல்பாகும். இலக்கியத்திலும் பண்பாட்டிலும்கூட மாறுதல்கள் சில ஏற்படுகின்றன. இந்தப் பிறமொழி உறவோ அன்றி 'ஆதிக்கமோ' தமிழுக்கும் இம்மொழி வழங்கும் நாட்டிற்கும் புதியதன்று. பன்னெடுங் காலமாகவே இவை தமிழிலும், தமிழ்நாட்டிலும் இருந்து வந்திருக்கின்றன. வடமொழி, தெலுங்கு, அரேபியம் முதலிய மொழிகளிடம் உறவாடியும் அடிமைப்பட்டும் கிடந்த தமிழ் இன்று ஆங்கில மொழிகளிடம் அதே தொடர்பை வைத்துக் கொண்டிருக்கின்றது. இத்தனை கலப்பிற்குப் பின்னரும் தமிழ்மொழி "வழக்கொழியாது" வாழ்ந்து கொண்டிருப்பதற்குக் காரணம் அதன் தனித்தன்மைத் தாக்கப்பட்ட போதும் தகர்ந்து விடாமல் காக்கப்பட்டு வந்ததேயாகும்.

தமிழின் தனித்தன்மையைத் தாழ்வுறாது காப்பது இலக்கணம்மட்டுமல்ல. தமிழ் மரபுமாகும். இக்கருத்தைத் தமிழுக்கு தொண்டுசெய்ய விழையும் எழுத்தாளர்கள்

---

மன்னுயிர்கட்கெல்லாம் தனித்தனி யன்பும் இரக்கமும் பூண்டுருகி நெகிழ்கிறது.

நாடாள்வோரில் பலர் தம்மை 'ஏழையர்காவலர்' என முழங்கக்கண்டு பொதுமக்கள் ஏமாறுகின்றனர். உண்மையில் பிறர் உள்ளத்தோடு நாம் தோய்கிறோம் என்றால்; அவ்வுணர்வின் எதிரொலி அவர்கள் உள்ளத்திலும் அதிர்ந்து முழங்கி ஆர்க்குமே! அதை மேடையில் முழக்கியா பறையறைவது? ஏட்டில் எழுதியா முரசடிப்பது?

இக்காலத்தில் எல்லாநாட்டிலும் இந்நிலை நிலவுகிறது. இதற்கு மாற்றுமருந்து வேண்டும். உணர்ச்சிப்பண்பாடு ஒன்றே உலகச் சீர்திருத்தத்துக்குவித்து. 'தன்னுணர்வு மலர்ச்சி' எனுந்தனிப் பெருங்கல்வியில் மாந்தர் அனைவரும் உண்மையாக முழுமுயற்சியோடு தலைப்பட்டால்தவிர, உலகம் பண்படுதல் அரிதே. இம்மலர்ச்சியைச் செந்தமிழ்க் கோயிலின் சீரார் முதற்செல்வப் பெருந்தகை பூங்குன்றப் பெரியோனின் ஆரா இன்ப அன்புணர்வுக் கொள்கையே உருவாக்கும். இவ்வறிவமிழ்தமருந்து உலகெலாம் பரவும் வகை செய்தல் அறிஞர் கடமையாம்.

டிலும் இக்கருத்தை ஒருவர் வலியுறுத்திருப்பதை எண்ணி நாம் மகிழலாம். (இலக்கணத்தைச் சிதைக்காமல் எழுதுவது மட்டுமல்ல தமிழ்; மரபை அழிக்காமல் எழுதுவதுதான் தமிழ்—ம. பொ. சிவஞானம்)

இலக்கணத்தையும் மரபையும் அழிக்காமல் எழுதும் எழுத்தாளர்கள் தமிழ்நாட்டில் குறைவென்றே நாம் சொல்லலாம். இலக்கணத்தைப்பற்றிக் கவலைப் படாத நினைவில் கொள்ளவேண்டும். திருச்சி எழுத்தாளர் மாநாட்வர்கள் "பொழுதுபோக்கு" எழுத்தாளர்கள் என்று தம்மை அழைத்துக் கொள்கின்றவர்களே. மிகச் "சாதாரண"மான வர்களின் உணர்வுகளுக்கு "இரை" போடுவதே அவர்கள் தொழில் என்றும் கூறலாம்.

மரபை மறந்து எழுதுகின்றவர்கள், அல்லது மாற்றி யமைக்க விரும்புகின்றவர்கள், தம்மை "முற்போக்கு"; எழுத்தாளர்கள் என்று சொல்லிக் கொள்ளுகின்றனர் புதுமை யைத் தமிழில் புகுத்தவேண்டும் என்பதற்காக மரபை மாய்க்க முயல்கின்றனர், அவர்கள்.

இந்த இருவழிப்பாதைகளும் தமிழின் வளர்ச்சிக்கு வழி காட்டுவதன்று. பழமையின் பெயரால் தமிழின் வளர்ச்சி அதே நிலையில் நின்றுவிடவும் கூடாது; புதுமையின் பெயரால் நிலை பிறழ்ந்துவிடவும் கூடாது. இந்த உண்மையைத் தமிழ் எழுத்தாளர்கள் உணராது போனல் தமிழ் இலக்கியம் நல்ல முறையில் செழிக்க முடியாது.

"வியாசம்" என்ற சொல் இறந்து ஆண்டுகள் பல ஆகிவிட்ட நிலையிலும் ஓரிரு ஏடுகள் கட்டுரை என்பதற்குப் பதில் 'வியாசம் என்ற சொல்லை எழுதுகின்றபோது வேதனை ஏற்படுகின்றது. "குடும்பத்திற்கு" ஏற்ற கதைகளையும், "பொழுதுபோக்கு";க் கதைகளையும் படிக்கின்றபோது அவ் வேதனை வளர்கின்றதேயன்றிக் குறையவில்லை. நாகரிகத்தின் தலையில் பழியைப் போட்டுவிட்டு, 'ரமேஷ்' என்றும் 'சுரேஷ்' என்றும் பாத்திரங்களுக்குப் பெயர் வைக்கின் றனர். இதற்குக்காரணம், எழுத்துத்தொழில் மொழியின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்ற எண்ணம் அவர்கள் பால் இல்லாததேயாகும்.

மரபைப் புறக்கணிக்கின்ற எழுத்தாளர்களுக்கும் தமிழில் குறைவில்லை. தமிழ்ப் பண்பாட்டிற்கு ஒவ்வாத வகையில் பலகதைகள் வெளிவந்துள்ளன. இவைகளுக்குக் காரணம் எழுத்துத்தொழில் சமுதாய வளர்ச்சிக்கு வழிகாட்டுவது என்ற எண்ணம் அவர்கள்பால் இல்லாததேயாகும்.

மேலும், பிறமொழிப் பயிற்சியின் விளைவாக, தேவையில்லாதவைகளையெல்லாம் தமிழில் கொண்டுவர முயல்கின்றனர். ஒவ்வொரு மொழியின் இலக்கியத்திற்கும் ஒவ்வொரு மரபுண்டு. வேற்றுமொழி இலக்கியத்தின்மரபு தமிழில் புகவேண்டுமாயின், தமிழ் மரபிற்கு ஏற்றவண்ணம் மாறுதல் பெறவேண்டும். இம்மாறுதல்கள் முறையாக நடைபெருமையாலாயே, தமிழ்க்கதைகளுள் காணப்படும் 'பெண் பாத்திரங்கள்' நம் சமுதாய நிலையினின்றும் சற்று விலகிநிற்கக் காண்கிறோம்.

அரிதாக, ஓரிரு இடங்களில் காணப்படும் பழக்கவழக்கங்களை, எழுத்தாளர்கள் 'பெரிது' படுத்தி, பெருமையைக் கூட்டி, தமிழ்ச் சமுதாயத்தைப் பாழாக்குகின்றனர் என்பதை யாரும் மறுக்க இயலாது. புதுநகைகளுக்கும், புதுச் சேலைகளுக்கும், புதுமுறைக் "கத்தரிவெட்டு"களுக்கும் "விளம்பரம்" தரத்தன்பாலர் கதை எழுகின்றனர்.

மேலும், பாத்திரத்தின் உள்ளப்பாங்கினை எடுத்துரைக்கும் ஆற்றல் இல்லாமல். உடல்வனப்பை விளக்குவதிலேயே தாள்களைச் செலவுசெய்கின்றனர். சமுதாயத்தின் உண்மை நிலையினைப் படம் பிடிப்பதாகச் சொல்லிக்கொண்டு, சமுதாயச் சீர்கேடுகளின்மீது வெறுப்பினை வளர்ப்பதற்குப் பதில், கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் வண்ணம் பலர் எழுதிக் குவிக்கின்றனர்.

இவ்வாறு, ஒருபுறம் சிலர் இலக்கணத்தைப் புறக்கணிக்க, மற்றோர்புறம் சிலர் மரபைப் புரக்கணிக்க, வேறு சிலர் இரண்டையுமே புறக்கணிக்கும் "நற்பணியில்" ஈடுபட்டுள்ளனர்.

எனினும்இந்தச் சூழ்நிலையிலும் இரண்டையும் போற்றி எழுதும் ஆற்றல் பெற்றவர்கள் சிலர் இருப்பதை எண்ணி நல்லதமிழ் நெஞ்சங்கள் மகிழ்ச்சியடையலாம். அந்தச்சிலருள் டாக்டர் மு. வ. முதன்மையானவர் என்று சொன்னால் அது மிகையாகாது. குறட்கோட்பாடுகளை நெஞ்சில் நிறுத்தி "திடீர்த்திருப்பங்"களுக்கு இரையாகாமல் புதினம் எழுதும் அவருக்குத்தமிழ் இலக்கிய உலகம் கடமைப்பட்டுள்ளது.

இவ்வாறு, இலக்கணம் மரபு இவற்றின்பால் பற்றும், இவற்றைப்போற்றும் மனப்பான்மையும் கொண்ட எழுத்தாளர்கள் தமிழில் பெருகினால்தான். அதன்வளர்ச்சி வளமுள்ளதாக இருக்கும். இலக்கியத்திற்கு, இலக்கணமும் மரபும் இருகண்களாகும். இக்''கண்களை விற்றுச்சித்திரம் வாங்கினால் கைகாட்டித்தான் சிரிப்பர்''.

# செயப்பாட்டு வினைச்சொல்
## PASSIVE VOICE-FORM
### வித்துவான் ஞானசம்பந்தம்

அவனியில் ஆங்கிலம் அவதரிக்கும்முன்பே இமயம் கடந்து வாழ்ந்த செந்தமிழில்—சமயம் வாய்க்கும் பொழுதெல்லாம் வாழ்விழந்த மேலைக்கிரேக்கம்—இலத்தின் முதலிய தொல்மொழிகளுக்கெல்லாம் கடன்தந்து உடன் சாகாது வாழும் வண்டமிழில்—ஆரியம்தனக்கு ஆருயிர் அளித்த அகிலமுதல் மொழியாம் நம்தாய்மொழியில்'' செயப் பாட்டுவினையை (Passivevoice) காண இயலவில்லை என்றவர் சிலர் உளர்.

இவர்களில் முதன்மையானவர் கண்காணியர் கால்டு வெல் துரைமகனும் முனைவர் மு. வரதாசனும் ஆவர். இவ்விருவரும் எத்தகையவர் என எழுதுதல் தேவையற்றது. ஐயமில்வகையில் செந்தமிழ்மேதைகள்! உண்மையில் நேர்மையர்!!

நேர்மையாளராம் இவ்வராய்ச்சியாளர்களின் நூற்களை—முறையே திராவிட ஒப்பியல்நூல், மொழிநூல் ஆகியவற்றை —பார்த்துப்படித்து'' செயப்பாட்டுவினை என்பது தமிழிலும் தமிழ்தழுவிய தெலுங்கு முதலியவற்றிலும் கிடையாது'' என்று தெளிந்த[?] பிற்பாடு (1) தொல்காப்பியம் (2) திருக் குறள், புறம், அகம் முதலிய சங்கநூற்கள் (3) பெருங்கதை— சிலம்பு, மணிமேகலை...முதலான செந்தமிழ் நூற்களைக் கண்டேன்; படிக்காமல் புறட்டும் பொழுதே திடுக்கிட்டேன்.

வேறுஎன்னசெய்வேன்? கால்டுவெல்லும் மு.வ. வும் வேறு சிலரும் தமிழில் இல்லை, தமிழுக்குக்கிடையாது என்ற செயப்பாட்டுவினை இருக்கும்பொழுது திடுக்கிடாமல் எப்படி யிருப்பது? இறந்துவிட்டார் என்று மறந்துவிட்டபிறகு— இருக்கிறேன் பார்என்று வருவதுபோலல்லவா இருக்கிறது? எனவே மீண்டும் மொழியாராய்ச்சி கண்டேன்; அதிலொரு குறிப்பு இருக்கக்கண்டேன்; அஃதாவது—இன்றையநாளில் ஆங்கிலத்தை [English] ஒட்டி மொழிபெயர்ப்பு நடையில் செயப்பாட்டுவினை வாக்கியம் [Passivevoice-sentence] உள்ளது'' என்பதாகும். இக்கருத்து இருநிலையில் தவறு ட்டயது. (1) செயப்பாட்டுவினை உண்டா? இல்லையா? என்பதுதான் நம்வினா? புதியதா? பழையதா? என்புதல்ல (2) மொழியாராய்ச்சியைப் புரட்டிப் பார்த்தகாரணமே

பண்டைய சங்கஇலக்கியங்களில் கண்டபிறகுதான்; எனவே புதியது—தற்கால மொழிபெயர்ப்பு என்பது ஏலாத ஒன்று.

இவ்விதம் பண்டைய இலக்கண—இலக்கியங்களில் இருப்பதைமட்டும் எடுத்துக்காட்டிவிட்டு வெகுசுலபமாக "செயப்பாட்டுவினை இருக்கிறது'பார்; எனவே கால்டுவெல், மு. வ. முதலானோர் கூற்று முற்றும்பொய்" என்று இக் கட்டுரையைமுடிக்க யான் தயாராய் இல்லை. ஏனெனில் "இல்லாத ஒன்றையும் ஏலாத பொய்யையும் பொல்லாத தீங்கையும் வெகுநல்லதாக அறியாமையிலும் கயமையிலும் சொல்லாத இலக்கண. இலக்கியம் எதுவும் இல்லை. இவ்விதி விஞ்ஞானம், கணிதம்; வைத்தியம் முதலிய எத்துறைக்கும் ஏற்கும் இப்பொது விதிப்படியே" இல்லாத உரிச்சொல், ஏலாத தொகைவகை, பொல்லாதபுணர்ச்சிவிதி" முதலிய பிழைகளும் குறைகளும் தொல்காப்பியத்தில் உள்ளன;

இம்முறையில் செயப்பாட்டுவினை வடிவமும் இருக்க லாம்? என்று என்ன இடமுண்டு. மேலும் ஆராய்ச்சித் தந்தையும் பெருந்தகையும் "கிடையாது" என்று அருதியிட்டு உறுதிசெய்தபிறகு "இருக்கிறது" என்று நான்கூறுவது நகைப்புக்கிடமாகும்; "இருக்கும் வாக்கியம் அன்னியமரபு என்கிறபொழுது "தமிழ்மரபு" என்றஎன்கூற்று மறுப்புக்கு இடந்தரும்; முடிவில் திகைப்பேமிஞ்சும்.

எவ்வகையிலும் ஐயம்கொள்ளாமல்" செயப்பாட்டு வினையை ஏற்கவேண்டுமானல்

(1) செயப்பாட்டுவினை என்றால் என்ன?

(2) இவ்வினை எதற்காக ஏற்படவேண்டும்?

(3) எவ்விதம் ஏற்பட்டது?

(4) ஏற்பட்டபிறகு என்ன ஆனது? எப்படி இருக்கிறது?

இவைகளை விளக்கவேண்டும்; இதுமட்டும்போதாது; கால்டுவெல், மு. வ. முதலானோர் "செயப்பாட்டுவினையா இது" என்று ஐயம்கொண்ட காரணம் என்ன? "செயப் பாட்டுவினையல்ல" என்றது எதனால்? தமிழ்மொழியில் கிடையாது; கிடையவே கிடையாது'...என்றுகூற ஆதாரம் என்ன? இவைகளையும் விளக்கவேண்டும். இவ்வளவையும் செய்தபிற்பாடுகூட என்கருத்து எடுபடுமா என்றே ஐயப் படுகிறேன்; ஏனெனில் அவ்வளவு எளியவன்நான்; இருப் பினும் என்னால் இயன்றவரை எல்லாவற்றையும் இக்கட்டு ரையில் கவனிக்கிறேன்.

## (1) வினைச்சொல்

*வரலாறு :*

கண்ணில்படும் கல், மண், புல், செடி, கொடி, ஆடு, மாடு, மீன், தவளை, காகம் முதலிய பொருள்களுக்கும் உயிர்—விலங்கு—களுக்கும் ஆதிமனிதர் பெயர் வைத்தனர்; சொல் அமைத்தனர்; அஃதாவது—கல், என்ற பொருளுக்கு "கல்" என்று பெயர்வைத்தனர்; காகம் என்றஉயிருக்கு "காகம்" என்று சொல்அமைத்தனர். கல்...காகம்...என்ற பெயரையும் சொல்லையும் அமைந்தவிதங்களைத் தேவநேயப் பாவாணரின் ஒப்பியல் மொழிநூல், சுட்டுவிளக்கம், தாய்மொழி ஆகிய நூற்களில் காண்க. அவ்விளக்கம் நமக்குத்தேவையில்லை. "கல்" என்றதும் கருங்கல், செங்கல், துண்டுகள் நினைவுவரும், பொருள்புலப்படும். இவ்வளவு போதுமானது.

கலை, காகம்'...என்று பொருளுக்குப் பெயர்அமைத்தது போல ஓடு, உருளு; ஆடு, பாடு, கத்து, குந்து, நில், படு; கொடு...என்றெல்லாம் பொருளின் அசைவுக்கு—இயக்கத்திற்கு—சொல்லமைத்தனர். இவைகளின் பொருளும் எளிதில் புலப்படும்.

ஆக, ஆதிமனிதர் இருவேறு சொற்களைப்படைத்தனர். ஒன்றுபொருளைக் (Thing object) காட்டும்; மற்றொன்று பொருளின் செயலைக் காட்டும். எனவே இவ்விருவகைச் சொற்களையும் அவ்விருபெயரால் அழைத்தனர். அஃதாவது பொருளையும் உயிரையும் காட்டும் சொற்களை" பொருள் சொல்' பெயர்ச்சொல் (Noun) என்றனர்; பொருளின் செயலைக்காட்டும் சொற்களை" செயல்சொல், தொழில்சொல், வினைச்சொல் என்றனர்.

அடி, பிடி, உதை, விரும்பு, பேசு...முதலியன வினைச்சொல் ஆகும். இவ்வினையின் ஒருவகையே செயப்பாட்டுவினை ஆகும்.

## (2) வினை வேறுபட்டவகை

(1) நடப்பது. என்றசெயல் சாதாரணமானது. இங்கிருந்து அங்கும் அங்குவிட்டு இங்கும் நகர்வது "நடை" ஆகும். இவ்விளக்கம் புரியவில்லை. எனில் "நீநட; அவன்நடந்தான்" என்ற வரிகளைக்காணகப் பொருள்புலப்படும். இதைக்கொண்டு வகைகாண்போம்.

ஒருமனிதன் காட்டில் அலைகிறான்; நடக்கிறான் அப்பொழுது புலியொன்று வருகிறது. பாய்ந்துஓடுகிறான் வேகு

மாகநடக்கிறான். பாய்ந்துதாவுகிறான்; எப்படியோ வீடுவந்து சேர்கிறான்.

மறுநாள், அம்மனிதன் முதல்நாள் நிகழ்ந்ததை நினைக்கிறான்; தானே அஞ்சுகிறான், மகிழ்கிறான்; கடைசியில் புலிவர எவ்விதம் ஓடிவந்தோம்" என்று எண்ணுகிறான்; அவ்விதமே ஓடுகிறான், நடக்கிறான்.

ஆக இம்மனிதன் புலிவந்த முதல்நாளும் நடந்தான், ஓடினான், தாவினான்; புலிவராத—இல்லாத—மறுநாளும் நடந்தான், ஓடினான். தாவினான். இரண்டுநாளும் செயல் ஒன்றே; ஆனால் முதல்நாள் செய்தசெயல்-ஓடியஓட்டம் –நடந்தநடை வாழ்க்கைக்குரியது; தேவையானது; இரண்டாம் நாளின்நடை தேவையற்றது; வெறும் பொழுது போக்கு, சுவையானது. ஆக சாதாரணநடை இவ்விதம் இருவகையானது; ஒன்று வாழத்தேவையாக இருப்பது இன்னொன்று உல்லாசமாக நடப்பது.

இதனால் இவ்விருநடைக்கும் இருவேறு சொல்தேவை சாதாரணநடைக்கு "நட" என்றசொல் முதலிலிருந்தே உள்ளது' எனவே உல்லாசநடைக்கு மட்டுமே சொல் வேண்டும்; அந்த உல்லாசநடைக்கு "புதியசொல் அமைப்பது" என்றமுறை இயற்கையானது; ஆனால் அப்படி புதியசொல் அமைக்காமல் நட,யைச்சிறிது மாற்றுவது செயற்கையானது; என்றாலும் வியப்போ விரோதமோ உடையது அல்ல; ஏனெனில் உல்லாசநடை என்பது சாதாரணநடையின் வகையேதவிர 'வேறானதுஅல்ல; செயல் அளவில் ஒன்றே தான்; இவ்விதம் ஏற்பட்டவகையே செயப்பாட்டுவினை.

மக்கள் உல்லாசநடைக்கு புதியசொல்லையும் அமைத்தனர். பழையசொல்லையும் மாற்றினர். எவ்விதம் என்றால் தமிழர் 'நட'வை'நழ' என்றேமாற்றினர். ஆங்கிலேயர் Walkக்குப்புதிய act என்றசொற்கள் ஒரேபொருளை உடையன.

தற்பொழுது நடப்பும்நடிப்பும் பிரிந்து வளர்ந்துவிட்டன, ஆதலால் இன்றைக்கு நட, நடி, Valklact ... ஒன்றல்ல; வெவ்வேறு.

(2) ஒருவன் ஆசையுடன் சினிமாவுக்குச் செல்கிறான்; நடக்கிறான்; அப்படி நடந்து செல்கையில் இன்னொருவன் தடுத்து, மறித்து வீட்டுக்குத்திரும்புகிறான்; நடக்காமல் நிற்பவனை இழுத்துவருகிறான். அவனும் இழுத்த இழுப்பில் அகப்படுகிறான்; அகப்பட்டு, நடக்கிறான். வீடுவருகிறான்; அதாவது நடக்கிறான்.

அவன் சென்றதும் நடையே; திரும்பியதும் நடையே; ஆனால் போகும்பொழுது அவனே நடந்தான்; தன்செயலால் நடந்தான்; திரும்புகையில் அவன் செயலால் நடக்கவே இல்லை; வேண்டும் என்று நடக்கவே இல்லை. ஆனாலும் நடந்தான், நடக்கவேசெய்தான் எப்படி? இன்னொருத்தன் இழுக்க இவன் நடந்தான்.

இதனால் செயல் இருவகையாவது வெளிப்படை; ஒன்று தன்செயல் மற்றது பிறர்செயல்.

இவ்விதம் வேறுபட்டவினையே செயப்பாட்டுவினை.

## (3) வினைவகை (Kinds of verb)

மேலே சொன்னபடி ஒருவன் தானேசெய்யும் செயலும் பிறருக்குச் செய்யும் செயலும் அம்முறையில் பெயர் பெற்றன. அஃதாவது தன்வினை, செய்வினை, பிறவினை என்று அழைக்கப்பட்டன; பிற' என்பது பிறர், பிறள், பிறன். பிறிதுமுதலிய எல்லாப்பாலையும் ஏற்கும், நமக்கு இவை யெல்லாம் தேவை இல்லை. மேலும் எளிதே புலப்படும். நிற்க.

செய்வினை, பிறவினை ஆகியவற்றைப்போல "செயப்பாட்டுவினை" என்பதும் ஒருவகை வினையாகும். ஆனால் ஏனைய வினையெலாம் செயல் செய்பவரைச் (எழுவாய்-Subject) சேர்ந்தது; செயப்பாட்டு வினைமட்டும் செயப்படுபொருளைச் சேர்ந்தது. இதனால் செயப்படுபொருள் என்பதைப்பற்றி தெரிந்து கொள்ளவேண்டும்.

### செயப்படுபொருள்

நாம்செய்யும் செயலானது எப்பொருளுடன் சேர்கிறதோ—அல்லது தொடர்புடையதோ அப்பொருளை செயல்படுபொருள் என்றனர் இந்த "செயல்படுபொருள் என்றதொடர் ',செயப்படுபொருள்" என்று தொகைப்பெயர் ஆனது.

உதாரணமா "பழத்தைத்தின்றான், ஞானத்தை விரும்பினாள், மாட்டைஅடித்தார், பையனைமுட்டியது" என்றால் தின்னல்முதலிய வினையுடன் தொடர்புஉடைய பொருள்பழம் முதலியன; இந்த "பழம்" முதலியனவே செயப்படுபொருள் ஆகும்.

"பையன் பழத்தைத்தின்றான்"...என்றபொழுது தின்னல் (தின்றல்) என்றசெயலைச் செய்தவன் பையன்தான், அம்முறையில் பையனும் தொடர்புடையவனே; ஆனால் "தின்னல்" என்றசெயல் பழத்துக்குத்தான் உரியது; பழத்தைத்தான் தின்னல்செய்தான். இந்தவேறுபாடு வெளிப்

படை. இவ்வேறுபாடு விளங்கவில்லை என்றால் தின்றான் என்ற வினையிடம் எதை என்று வினவ "பழம்" என்று விடைவரும்.

அதாவது, வினையிடம் எதை, எவரை என்று வினவ விடையாக உள்ளதே செயப்படுபொருள் ஆகும். நிற்க;

சாப்பிடும் சோறு, காய், கறிகளை நாம் அதற்குரிய பெயராலும் அழைக்கலாம், அதாவது சோறு—சாதம் என்றும் சொல்வோம். இவ்விதம் சொல்லாமல் சாப்பிடும் பொருள் என்றும் சொல்வோம். சாப்பிடும்பொருள் என்று நீட்டி முழக்காமல் "சாப்பாடு" என்று சுருக்கமாகச் சொல்வதுண்டு. இவ்வகைப்பெயரை "தொழிற்பெயர்" என்பர். இந்த முறையில் செயல்படும்பொருள் என்பதைச்சுருக்கமாக செயற்பாடு என்றனர்; இது "செயப்பாடு" என்றானது'

## செயப்படுபொருளின் அவசியம்

இந்த உலகில் எந்தச்செயலும் தானாகநிகழாது. ஏதாவது எழுவாய் (செய்தவன்–Subject) இருக்கவேண்டும்; இதனால் தான் எழுவாயுக்கு வினைமுதல் என்றொரு பெயரே ஏற்பட்டது; அதாவது ஏதோவொருசெயலைச் சொன்னதும் வினைமுதல் என்ற எழுவாயே முன்நிற்கும்.

இவ்விதம் எழுவாய் முன்நிற்காமல் செயப்படுபொருள் முன்நிற்கும் நிகழ்ச்சிகள்நடந்தன; நிலைகள் ஏற்பட்டன; எப்படியோ? சாலையில் ஒருவன் அடிபட்டு கிடப்பதாகக் கொள்வோம். அப்பொழுது எவன்அடித்தான்? எங்கே அடித்தான் என்றெல்லாம் கவனம்செலுத்தமாட்டோம்; நம்கவலையெல்லாம் அடிபட்டஆள்மீதே இருக்கும், இது நிகழ்ச்சியாகும்; நிற்க, சிலபையன்கள் மரத்தில்இருக்கும் மாங்காயை விரும்புவதாகக்கொள்வோம்; அப்பொழுது எண்ணமெல்லாம் மாங்காய்மீது—செயப்படுபொருள்மீது இருக்குமேதவிர எழுவாய்மீது இருக்காது; இன்னும் சொன்னால் எழுவாய் எவர்என்றே வரையறுக்கமுடியாது.

இவ்விதம் செயப்படுபொருள் வழக்கில் சிறப்பு பெற்றது.

மேலேகண்ட கதைப்படி, பையன்களின் எண்ணத்தைக் கவர்ந்த மாங்காய்தான் பொருள்—முக்கியம்; அது விழுவது தான் அப்பொழுதையசெயல்; அதனால் அந்த இரண்டையும் இணைத்தும் "மாங்காய் விழவில்லை, மாங்காய் விழுந்து விட்டது, விழுகிறது" என்று பேசினால்போதும். உண்மையைச்சொன்னால் வேறுஎப்படிச்சொல்வது?

இவ்விதம் செயப்படுபொருள் செயல்பட்டது; வினை தொண்டது.

## செயப்படுபொருள்வினை

"மாங்காய் விழுந்தது" என்றால் எழுவாய் வினையா? செயப்படு பொருள்வினையா? அதாவது மாங்காய் தானாக விழுந்ததா? மற்றவரால் விழுந்ததா? என்பது புரியவில்லை; தானாகவிழுந்தாலும் மற்றவரால் விழுந்தாலும் செயல் என்னவோ ஒன்றுதான். அதனால்தான் ஆதிமனிதன் வெறுமனே சொன்னான்; ஆனால் அறிவுவளர்ந்த பிற்கால மனிதன் நுண்ணிய வேறுபாடுவிரும்பினான்.

செய்வினை, பிறவினை, போல செயப்படு பொருள்வினை கொள்ளநினைத்தான், வகைசெய்ய வழிகாணத்துடித்தான். அதாவது அடைமொழியோ குரல்மாற்றமோ (Accent) இல்லாமல் சொல்லளவில் வேற்றுமை விரும்பினான். இதனால் செயப்படுபொருள் வாக்கியங்களை நன்குகவனித்தான். வினைக்கும் செயப்படுபொருளுக்கும் உள்ள உறவை துறுவினான். முடிவில் வினையெல்லாம் செயப்படுபொருளில் படுவதைக்கண்டான்; அதேவேளையில் செயப்படுபொருளுடன் இருப்பதையும் கண்டான். இதனால் படு, இரு ஆகிய சொற்களையே செயப்படுபொருள்வினைக்கு துணைவினையாகக் கொண்டான். அதாவது அடிஎன்றால் தன்வினை, அல்லது எழுவாய்வினை, அடிபடுஎன்றால் செயப்படு பொருள்வினை என்றுகொண்டான் புரியவில்லையா? பாலு அடித்தான் என்றால் அவன்தான்அடித்தான்; ஆனால்பாலு அடிபட்டான் என்றால் அடித்தவன் அவன்அல்ல; அடியைப்பெற்ற செயப்படுபொருள்தான் அவன். இப்பொழுது புதுவினை புரிந்திருக்கும். அதுஒரு தனிவினை என்று எழுதத்தேவை இல்லை.

## செயப்பாட்டுவினையும் பிற்காலநிலையும்

செயப்படுபொருள்வினை என்றபெயர் தமிழில் "செயப் பாட்டுவினை" என்றும் ஆங்கிலம் முதலியவற்றில் படுவினை என்றபெயர் பசுவினைஎன்றாகி பாசிவ்வாய்ஸ் (Passive voice) எனவழங்குகிறது.

செய்' என்ற வினைப்பகுதியிலிருந்து "செய்ய" என்ற எச்சம் ஏற்படும். இவ்விதமே செல்ல, செல்ல, காண, என்றெல்லாம் எச்சவடிவங்கள் ஏற்படும்.

போ, நட, நடி முதலியபகுதியிலிருந்தும் 'போவ' 'நடவ 'நடிய' என்றே எச்சங்கள் வழங்காமல்" போக, நடக்க, நடிக்க" என்றவடிவங்களே வழங்கத்தலைப்பட்டன. இதிலிருந்து நீங்கள் — வாசகர்களேநீங்கள் — தெரிந்து

கொள்ளவேண்டிய செய்தியாவது—தமிழில் பகுதியுடன் இடைநிலை, விகுதிகள் சேரும்பொழுது ஒருசிலமாற்றங்கள் ஏற்பட்டன; இம்மாற்றங்களையே பண்டைய இலக்கணிகள் (1) சாரியை (2) எழுத்துப்பேறு (3) சந்திவிகாரம் என்றனர். இந்தச்சாரியை முறை செயப்பாட்டுவினையில் மெள்ள மெள்ள தலையெடுத்தது.

மேலும்

'செயப்பாடு—செயப்பாட்டுவினை' என்ற பெயரில் "செய்படு (செய்+படு)" என்ற வினைப்பகுதியும் படு'வும் இல்லாமல் செய என்ற எச்சமும் படு'வும் இருப்பதால் செயப்பாட்டுவினையிலும் செயஎன்ற எசசமே இருக்க வேண்டும் என்ற வரையறையைப் புலவர்கள் புகுத்தினர்கள். இந்த வரையறையால் "அடிபடு" என்றவினைவடிவம் "அடுக்கப்படு" என்று உருமாறியது.

"பாலன் ராமனால் அடிபட்டான்" என்ற வாக்கியமும் "பாலன் ராமனால் அடிக்கப்பட்டான்" என்றவாக்கியமும் ஒரே பொருள்உடையது- நிற்க;

'போ' என்ற வினைக்கு எச்சமாக 'போவ (போ+அ)' என்ற ஆதிநிலையும் 'போக (போ+அ'—அல்ல)' என்றபுதிய நிலையும் வழங்குவ்துபோல 'நடவ, நடிய' என்பன இப்பொழுது தமிழில் இல்லை. ஏனைய திராவிட மொழிகளில் உள்ளன என்பதை இப்பொழுது எடுத்துக்கொள்ள வேண்டாம். தமிழளவில் 'நடிய' வழக்கு இல்லை.

இவ்விதமே "அடிபடு" "உதைபடு" "விழுபடு" முதலிய சில செயப்பாட்டுவினைகள் ஆதிநிலையிலும் "அடிக்கப்படு, உதைக்கப்படு, விழப்படு" என்றபுதியநிலையிலும் வழங்குகின்றன. ஆனால் "கொல்படு" முதலியன 'கொல்லப்படு' என்ற எச்சவடிவுமட்டுமே வழங்குகின்றன. ஆதிநிலை இறந்தது.

## செயப்பாட்டுவினை இறந்தது

சங்க காலத்துக்கு முன்பு குறைவாகவும் பின்பு மிகுதியாகவும் கொல் நயம் தேடும் போலிப்புலவர்கள் வளர்ந்தார்கள், வன்மையுற்றார்கள். இவர்களாலேயே கொல்லும் மொழியும் கெட்டது என்பதை தேவநேயபாவாணர், மு. வ. அப்பாத்துறை முதலியோர் நன்குவிளக்கியுள்ளனர். "சித்தர் பாட்டுகள் கெட இவர்களே காரணம்" என்று இலக்கிய வரலாற்றில் சுப்பிரமணியப்பிள்ளை எழுதியுள்ளார்.

(தொடரும்)

# 'செற்றன்—செத்தான்

'அன்னே'

வாசுகி உயர்நிலைப் பள்ளி—சென்னை-19

துணர் 39. மலர் 6. தமிழ்ப்பொழில் இதழில் வெளியாகிய "ஓர் இலக்கண விளக்கம்" என்னும் மறுப்புக் கட்டுரைக்கு மறுப்பு ஈந்து ஈண்டு விளக்கம் தர முனையலானேன். ஒருவர் குறை ஒருவருக்குத் தெரிதல் இயல்பே. ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு துறையில் வல்லவராக இருத்தல் கூடும். எனவே, உண்மை வெளியாக வேண்டும் என்னும் நோக்கந்தான் இஃது எழுதப்படுகின்றதே யன்றி, யாரையும் குறை கூறுவதற்காக அன்று:

" அறு—அறுதல்—அற்று—அற்றன்
உறு—உறுதல்—உற்று—உற்றன்
பெறு—பெறுதல்—பெற்று—பெற்றன் "

இம்முறையானே, 'செறு-செறுதல்-செற்று-செற்றன்' என்பதும் ஆயிற்று. இங்ஙனம் வருமாறு நோக்கி, எல்லாச் சொற்களும் இவ்வாறே வரல்வேண்டும் என்பதில்லை. மொழியியலில் ஒருவிதி, ஒரு பாங்கான சொற்களுக்கே பொருந்தும். இதனை ஓராது,

" ஒறு—ஒறுதல்—ஒற்று—ஒற்றன்
நிறு—நிறுதல்—நிற்று—நிற்றன்
பொறு—பொறுதல்—பொற்று—பொற்றன்

என வருமாறு இல்லை என்று மறுப்பது மொழியியலுக்குப் பொருந்தாவொன்று. 'அற்றன், உற்றன். பெற்றன், செற்றன்' என்பன ஒரு பாங்கின. 'ஒறுத்தான், நிறுத்தான், பொறுத்தான், என்பன வேறுபாங்கின. இரண்டையும் இணைத்து நோக்குவது பொருந்தாது. 'அற்றன்' என்பது, 'அற்று-அறுதல்-அறு' எனச் செல்லும். 'ஒறுத்தான்' என்பது, 'ஒறுத்து—ஒறுத்தல்—ஒறு' என வேறு வகையாகச் செல்லும்.

இஃது எதனைப் போன்றதெனின், 'உடு—உடுத்தல்—உடுத்து—உடுத்தான்'; 'எடு—எடுத்தல்—எடுத்து—எடுத்தான்; என்னும் முறையினைச் சுட்டியவிடத்து 'நடு—நடுத்தல்—நடுத்து—நடுத்தான்' என ஏன்வரவில்லை என்று மறுப்பதைப் போன்றதாகும். 'எடு—உடு' என்பன ஒரு பாங்கின, 'நடு' வேறொரு பாங்குடைத்து. 'நடு' என்பது வேறுபாங்கான், 'நடு-நடுதல்-நட்டு—நட்டான்' என, 'செறு-செற்றன்' போல வரும்.

'செறு-செறுதல்—செற்று-செற்றன்' என்னும் சொற்களுக்கு, 'படு-படுதல்-பட்டு-பட்டான் அதாவது அழி-அழிதல்—அழிந்து-அழிந்தான் என்று பொருள் கொள்வது கூட

இயல்பானதே. "செற்று-செற்றான்' என்ற சொற்களின் அமைப்பே அவை பிறவினை நிகழ்ச்சியின் பாற்படுமெனத் தெளிக்கவும் அவை தம்மைத் தன்வினை நிகழ்ச்சியாகப் பொருள்காணற்கு ஏது யாதோ அறிகிலம். அவ்வாறு பொருள் கோடற் இலக்கியமும் இன்றே" என மறுப்பாசிரியர் மறுத்துள்ளார். இதுகுறித்துச் சிறிது ஆய்வோம்.

'பெற்று—பெற்றான் கற்று—கற்றான்
உற்று—உற்றான் இற்று—இற்றான்
அற்று—அற்றான் ஏற்று—ஏற்றான்'

இவையாவும் செற்று-செற்றான்' என்பதுபோன்றவையே. இவையாவும் தன்வினையா? பிறவினையா! 'செற்று-செற்றான்' என்னும் பாங்கில் வரும், 'பெற்றான், உற்றான், அற்றான், கற்றான், இற்றான், ஏற்றான்' என்பன யாவும் தன்வினையே' இதில் ஐயமில்லை, இவற்றை 'பெறுவித்தான், உறுவித்தான். அறுவித்தான், கற்பித்தான், இறுவித்தான், ஏற்பித்தான், என்றே பிறவினையாக மாற்ற வேண்டும். 'பெற்றான்–பெறுவித்தான் என்பதுபோல, 'செற்றான்-செறுவித்தான்; 'பகைத்தான் பகைப்பித்தான் என்றலே அமைவுடைத்து: எனவே, 'செற்றான்' தன்வினையே. பெற்றான். கற்றான். என்பனவற்றைப் பிறவினையாகக் கொண்டால். இவற்றின் தன்வினை வடிவென்ன? இதுபோன்றே, 'செற்றான்' 'பிறவினையாயின் இதன் தன்வினையாது? 'செற்றான்' என்னும் சொல் பிறவினைப் பொருள்தருதல் நோக்கி, அதனைப் பிறவினைச் சொல் எனல் இயலாது. இதுநோக்கியும், 'செற்றான்' தன்வினையேயாம்.

"புண்டாழ் குருதியின் வெள்ளத் துயர்கொடு
புக்கார் சிலர்;சிலர் பொதிபேயின்
பண்டா ரத்திடை யிட்டார் தம்முடல்
பட்டார் சிலர்;சிலர் பயமுந்தத்
திண்டா டித்திசை யறியா மறுகினர்
செற்றார் சிலர்;சிலர் செலவற்றார்
கண்டார் கண்டதோர் திசையே விசைகொடு
கால்விட்டார் படைகை விட்டார்"

—சுந்த. அக்கவதை. 972.

கம்பர், அனுமானைக்கண்ட அரக்கர்தம் செயலை விளக்க முயன்றார். "அனுமானைக்கண்ட அரக்கரில்சிலர், குருதி வெள்ளத்தில் புகுந்துஒளிந்தனர். இன்னும்சிலர் பிணக்குவியலுக்கிடையே மறைந்தனர். சிலர் வீழ்ந்துபட்டனர். சிலர் திசையறியாது மயங்கி நின்றனர். இன்னும்சிலர் அங்கேயே அழிந்தனர். சிலர் அஞ்சி மெய்மறந்து அசையாது நின்றனர்.

சிலர்நோக்கிய திசையே விரைந்தனர். இன்னும்சிலர் கையிலுள்ள படைமுதலியவற்றை விட்டெறிந்து நடுங்கினர்'' எனக் கம்பர் குறிக்கின்ருர்.

புக்கார், இட்டார், பட்டார், மறுகினர், கண்டார், கைவிட்டார் என அரக்கர்தம் செயலாகவே தன்வினையில் எல்லாச் சொற்களையும் கம்பர் பயன்படுத்தியுள்ளமை இங்கு நோக்கத்தக்கது. இப்பாடலில் எல்லாச் சொற்களையும் தன்வினையில் அமைத்தவாறு போலவே, 'செற்ருர்' என்னும் சொல்லையும் கையாண்டிருக்கிருர். இச்சொல்லின் பாடபேதமான 'சென்ருர்' என்பது இங்கு அத்துணைப் பொருந்தாது. 'திசைமறுகினர்: செலவற்றனர்' என்றவிடத்துச் 'சென்ருர்' என்னும்பேதம் அமைவுடைத்தாயில்லை என்பது வெளிப்படை. சிலர்செற்ருர்—சிலர் (அங்கேயே) இறந்தனர்—அழிந்தனர்' என்பது கம்பர்வாக்கு.

றகரம் தகரமாக மாறுதல் பெருவழக்கு இவ்வாறே, 'செற்ருன்' என்னும் சொல்லே, றகர தகர மாறுபாட்டான், 'செத்தான்' எனத்திரிந்தது. றகரம் தகரமாகத்திரிதல், உலக வழக்கிலும், இலக்கியவழக்கிலும் பெரிதும் காணப் படுவதொன்றே. ஆற்றினை அடுத்தஊர் ஆற்றூர். இச்சொல்லே றகரம் தகரமாகத் திரிந்து ஆத்தூர் என வழங்கப்படுகிறது. போற்றுதல் என்னும் பொருளுடைய ஏற்றுதல் என்னும் சொல், ஆத்திச் சூடியில், "ஏத்திஏத்தித் தொழுவோம் யாமே'' என வருகிறது. றகர தகரத்திரிபு பிற்கால இலக்கியங்களில் மட்டுமன்றி, சங்க இலக்கியங்களிலும் பரக்கக் காணப்படுகின்றது.

| | | பா. வரி. |
|---|---|---|
| ஏற்றம்— | (புறம்) | 388–11 |
| ஏற்றிய (புகழ்ந்த) | | 69–13 |
| ஏற்றுதும் | (பரிபாடல்) | 8-80 |

ஆராய்ச்சிக்காகப் பரிபாடலையும் புறநானூற்றையும் ஆராய்ந்ததில் 'ஏற்றம்' என்னும் சொல்லின் அடியாக வந்த சொற்கள் 39 காணப்படுகின்றன. இந்த 39 சொற்களுள் றகரத் தகரத்திரிபின்றி இயல்பாக விளங்குவன, இரண்டு இலக்கியங்களையும் சேர்த்தே மூன்றுதாம் காணப்படுகின்றன. றகரம் தகரமாகத்திரிந்தவை 36 சொற்களாகும். அதாவது, பழம் சங்கநூல்களிலேயே றகரம் தகரமாக மிகப் பேரளவில்திரிந்து, இலக்கிய வழக்கிலும் வந்துவிட்டது என்பது வெளிப்படையாகிறது. 93 விழுக்காடு றகரம் தகரமாகத்திரிந்தே சங்க நூற்களிலும் கானப்படுகின்றண. இவ்வாறு இருத்தலினல் 'செற்ருன்' என்பது செத்தான்

எனத்திரிவுற்று, 'செத்தாருள்' எனத்திருக்குறளிலும், 'செத்தோர்' எனப்புறத்திலும் 'செத்தோன்' எனச் சிலம்பிலும், 'செத்தால்' எனத் தேவாரத்திலும் காணப்படு'வது வியப்பன்று

ஊர்ப்பெயர்களும் றகரம் தகரமாகத்திரிந்து பெருவழக்காக உள்ளன. ஊற்றுமலை-ஊத்துமலை; ஊற்றுக் காடு-ஊத்துக்காடு-சாற்றூர்-சாத்தூர், குற்றாலம்-குத்தாலம் (தஞ்சை) என்பன அறியத்தக்கன. ஊற்றுஎன்பது ஊத்து எனத்திரிந்து, தாழையூத்து (நெல்லை) தன்னூத்து (நெல்லை) அத்தியூத்து (இராமநாதபுரம். அப்பனூத்து (மதுரை), அடியனூத்து (மதுரை), கண்ணூத்து (திருச்சி), மாறனூத்து (திருச்சி), மாவூத்து (சேலம்) எனப்பல ஊர்களின் பெயர்கள் வழங்கி வருகின்றன.

செற்றல் என்பதற்கு அழிதல், கொல்லல் முதலான பொருள்களும் உண்டு. செற்றல்—செல்லுகை (பிங். M. S. S.) செற்றும்வகை குத்தி (கம்ப. மகுட. 8.), செறல்—கொல்லுகை (தொல்-சொல், 72. சேனா.) செறுப்பு-கொலை. M. Winslow. A. Comprehenssve Tamil and English. செத்தெழுத்து < செற்றெழுத்து=(உயிரற்ற எழுத்து)=ஒற்றெழுத்து (Winslow) செத்தை < செற்றை=(உயிரற்று உலர்ந்தது) வைக்கோல், சருகு, இறந்தவிலங்கின் அழுகியதசை Putrefied flesh) Winslow. செற்றெழுத்தே-செத்தெழுத்து எனப்பட்டது என்று கொள்வதன்மூலம் திருவின்ஸ்லோவும், 'செற்றான்—என்பதே செத்தான்' ஆயிற்று என்பதை உடன்படுகிறார் என்பது வெளிப்படையாகிறது.

'செற்றான்—செத்தான்' என்னும் சொல்லின்பகுதி 'சா' என்று குறிப்பிடும் இலக்கண உரையாசிரியர் கூற்று ஒவ்வாது. 'சாய்ந்தான்' என்னும் சொல்லின்பகுதி 'சாய்' என்பது 'சாய்' என்பதே, ஈற்றுமெய்கெட்டு 'சா' எனத் திரிந்து நின்றது.

நோய்ந்தான் - (நோஞ்சான்) - நோய்ந்து (நொந்து)- நோய்தல்-நோதல்-

—நோய்வு-நோவு-நோய்க்காடு-(நோக்காடு—
—நோய்-நோ.

இதே முறையான்,
சாய்ந்தான்—(சாஞ்சான்) சாய்ந்து (சாஞ்சு)-சாய்தல்-
சாதல்-சாய்வு-சாவு-
—சாய்க்காடு-சாக்காடு—சாய்—சா.

'நோய்' என்னும் சொல்லின் அடியாகத்தோன்றும் சொற்களைப்போலவே, 'சாய்' என்னும் சொல்லின் அடியாகத்

# 'கம்பனும் — கூனியும்

புலவர்: மு. சுந்தரேசன், தமிழாசிரியன்.

'வேடிக்கை வினையாயிற்று' என்று கூறுவதுண்டு. மாதவி பாடிய கானற்பாணி வேடிக்கையாக அமைந்த போதிலும்; கனகவிசயர் முடித்தலையை நெரித்தபோதிலும் கோவலன் வினைக்கும் வித்திட்டுவிட்டது. ராமன் வேடிக்கை யாகஎய்த அம்புருண்டை இராவணின் தலை அறுபட்டுவிழக் காரணமாக அமைந்துவிட்டது. சிலம்புக்கும் கம்பன் காதைக்கும் அடிப்படையானவற்றுள் 'ஊழ்வினை உருத்து வந்தூட்டும்' என்ற செய்தியும் ஒன்றாகும்.

தமிழ்இலக்கியங்களைத் திறனாயும் கலை பெருகுமானல் இலக்கிய மாந்தர்பலர் பண்புநலன்களையெலாம் நாம்அறிதல் கூடும். சிலம்புப்பாத்திரங்களில் பாண்டியன். பொற்கொல்லன் பாண்டிமாதேவி முதலியோர் எல்லாம் கோவலன் ஊழ்வினை ஆற்றலுக்கு இலாக்காகி விடுகின்றனர், இதேபோன்றே ;கம்பனது காப்பியத்தும் ஊழ்வினை ஆற்றலுக்குக் கூனி முதலில் இலக்கு ஆகிருள். கூனியை முதன்முதலில் அறிமுகப்படுத்துகின்ற கம்பன்.

இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்
துன்னரும் கொடுமனக் கூனி தோன்றினுள்

(மந்தரை-சூழ்-படலம். 46)

என்றே அறிமுகப்படுத்துகின்ருன். காப்பிய நிகழ்ச்சிகட்கு வித்தாக அமைந்து அயோத்தியில் புயலைக்கிளப்பிவிட்ட இக்கூனி பின்னுல் முகவரி இன்றியே மறைந்துவிடும் நாடகப் போக்கினைக் கம்பன் காவியத்துள் காணலாம்,

தமிழ்க் காப்பியங்களுள் கம்பன்படைத்த புதுமை பல; பிறகாப்பியங்கள் எலாம் ஆண்களில் கொடியவர்களை 'வில்லு'னுக்கிக் காட்டுவதை மேற்கொண்டிருக்கக் காணலாம். சிலம்பில் பொற்கொல்லனும், சிந்தாமணியில் கட்டியக்காரனும், மனேன்மணியத்துள் குடிலனும் காப்பியத்துள் விளக்கும் 'வில்லு'ர்கள். பெண்களிலும் கொடியவர்—அவர்கள் நடமாடும் உண்மை உலகியலைக் கம்பன் காட்டுகிருன். தாடகை, சூர்ப்பனகை, கையேகி போன்ருேர் கொடிய பண்பையும் கம்பன் படைக்கிருன். பெண்ணுலகினும் அந்தக் கொடுமை மனம் உண்டென்பதை உணர்த்துகிருன் கவிஞன்.

நுண்மையாக ஆராயுங்கால், கூனி மிகக் கொடியவள், பழி, பாவங்கள் உடையவள் என்று சொல்லத் தோன்ற வில்லை, கூனி கைகேயிக்குப் பணிவிடை செய்யும் ஓர்

குற்றேவல் மகள்; கைகேயியின் அன்புக்குப் பாத்திரம் ஆனவள்; கைகேயியின் நலனுக்காக உழைக்கும் பண்பு கொண்டவள்: கல்வியறிவு இல்லாதவள். இவை கூனிக்கு அமைந்துள்ள பொதுவான குண இயல்புகள்.

உண்ணும் நீரினும், உயரினும் இராமனையே நினைக்கின்ற அயோத்தி நகரில் அவனையும் வெறுக்கும் ஒருத்தியாக இக்கூனி வாழ்ந்து வந்தாள். இளமையில் இராமன் தனக்குச் செய்த தீங்கு பழிவாங்கும் நெஞ்சு உடையவளாய் அவளை அமைத்துவிட்டதோடு, அயோத்தி அரசியலில் பெரும் புயல் ஒன்றையும் கிளப்பிவிட்ட நிலையைக் கம்பன் காட்டுகின்றான்.

இராமன் முடி சூடும் செய்தியைக் கேள்வியுற்ற கூனிக்கு இராமன் இழைத்த கொடுமை நினைவுக்கு வந்தது; துடித்தாள். மன உளைச்சல் அடைந்தாள்; இராமன் மீது எவ்வளவு வெறுப்பு கொண்டிருந்தாளோ அந்த அளவு பரதன்மேல் ஆழ்ந்த பாசத்தையும் கொண்டிருந்தாள், ஆகவேதான் முடிசூடும் செய்தி கேட்ட அவட்குப் பரதன் ஏமாற்றப் பட்டான் என்ற வருத்தமும் தோன்றிற்று. கைகேயியை இருப்பிடத்துக்கும் செல்லத் தூண்டியது. கைகேயியின் எழுப்புவதிலிருந்து அவளுடன் உரையாடும் காலம்வரைக் கம்பன் கூனியைக் கொடுமைக்காரியாகவே ஆக்கிக் காட்டுகிறான். 'துன்னரும் கொடுமனக் கூனி,' 'காலக்கோள் அனையள்,' 'வெவ்விடம் அனையவள்' 'சூழ்ந்த தீவினை நிகர் கூனி,' 'தீய மந்தரை' இத்துணை அடைமொழிகளையும் கம்பன் தன் உணர்ச்சியை மீறியே வழங்குகின்றான்; பின்னால் அவளால் நிறைவேறப்போகும் கொடுமைகளை எலாம் உணர்ந்த கம்பன் சிறிது அளவுக்கு மீறியே அவளைக் கொடியவள் ஆக்கி விட்டான்.

இராமன்மேல் கூனி கொண்டிருந்த வெறுப்புக்கு இராமனே முதற்காரணம் ஆவான். மன்னித்து அவன் செய்த குறும்பை —அம்புருண்டை எய்த செயலை மறக்க முடியாமை கூனியின் முழுத்தவறு அன்று; அத்தகைய கல்வி, அறிவு, பண்பாட்டை ஒரு குற்றேவல் மகளிடம் எதிர்பார்ப்பதும் இயலாத ஒன்று. ஆதலின் என்னதான் விளையாட்டுப் பிள்ளையான இராமன் அவளிடம் குறும்பாக நடந்தாலும் கூனி மறந்திருக்கலாம்; மன்னித்தும் இருக்கலாம் என்று எதிர்பார்ப்பது அரிது, 'பகை' என்னும் அளவுக்கு இராமன் குறும்பு அமைந்து விட்டது: இன்னா எனத்தான் உணர்ந்ததை அவளிடம் செய்து விட்டான். ஆகவேதான் இராமன் முடிசூடும் செய்தியை அறிந்த அவள் அவன் கொடுமையை எண்ணினாள். என்ன தான் அயோத்தி மகிழ்ச்சிக் கோலத்துள் இருந்தாலும் அவளுக்கு அந்த நிகழ்ச்சியே மனத்துள் தோன்றிற்று.

பண்டை நாள் இராகவன் பாணி வில்லுமிழ்
உண்டை உண்டதைத் தன் உள்ளத் துள்ளுவாள்
(மந்-க-48)

என்று கூறுகிறான் கம்பன்.

இந்த எண்ணத்தோடு சென்ற அவள் கைகேயியின் இடத்தை அடைந்து அவளைத் துயிலினின்றும் எழுப்பினாள். இந்த இடத்தைக் குறிப்பிட்டுக் கம்பன் கூறும் நயம் இன் புறத்தக்கது. கேட்கவந்த கைகேயி தென்பட்டாளாம்! 'கடைக்கண் 'அளி பொழிய' பொங்கு அணைமேற் கிடந்தாள்' என்கிறான் கம்பன். அத்தகையவளைத் தொட்டாள் கூனி; தொட்டாள் என்று கூடக் கம்பன் உணர்த்த வில்லை. கைகளின் தீண்டினாளாம்; தீண்டும்போதே நஞ்சு புகுந்து விட்டது. தூக்கிக் கொண்டிருந்த கைகேயியினிடம் இராமன் முடிசூடும் செய்திபற்றிச் சொல்லப்போகும் பாடலைக் கம்பன் மிகத் திறம்படவே பாடுகிறான்.

'மூண்டெழு பெரும்பழி முடிக்கும் வெவ்வினை
தூண்டிட, கட்டுரை சொல்லல் மேயினாள் (மந். கழ். 57)

கூனி போடுகின்ற தூபம் பெரும்பழியைக் கைகேயிக்கு கிளப்பப் போகின்றது; இந்தப் பெரும்பழியை வினை தூண்ட, கூனி தூண்டுகிறாள். எனவே கூனியின் எண்ணத்தை வெவ் வினை சாதகமாக்கிக் கொள்கிறது. அவள் உள்ளததே இரு எண்ணங்கள் அலைமோதுகின்றன. இராமன் முடிசூடும் பேற்றைப் பெறுகின்றானே என்பது ஒன்று தன் அன்புக்குரிய பரதன் திறமையும், சிறப்பும் மங்கிவிடுமே என்பது மற் றொன்று.

கூனியைப் பொறுத்தவரை இந்த இரண்டு எண்ணங் கட்காக அவள்மேல் பழி கூறுதல் வீணாகும்; இரண்டாவதா கப் பரதன் ஆளவேண்டும் என்று எதிர்பார்த்த செயல் அவள் எசமானி விசுவாசத்தையே காட்டும்; ஆகலின் கூனியின் விருப்பமும் — எண்ணமும் அவளைப் பொறுத்த அளவில் சரியே. இவற்றையெலாம் உணர்ந்தே தான் கம்பன் மிகத் திறம்பட அவளைப் பாத்திரம் ஆக்கிக் காட்டுகின்றான். செய்து விட்ட தவறினால்—நன்மை கிட்டியபின் அதுவும் நன்மைக்கே என்று நிறைவு கொள்வதைப் போல கூனியின் சிறுதவறு நன்மையே விளைத்தது இறுதியில்.

இராமனை வளர்த்தவள் கைகேயி என்பது கூனிக்குத் தெரிந்த ஒன்றே என்றாலும் அவள் தன் எசமானியின் நன்மைக்காக இராமன்மேல் கொண்டிருந்த

நம்பிக்கையினையும்-பாசத்தையும் மிகத் திறமாக மாற்றி விடுகிறாள். கல்வியறிவே இல்லாத கூனி கேகயன் மடந்தையுடன் உரையாடும் உரையாடல்கள். மிகப் போற்றத் தக்கவை. கூனியால் சொல்லாற்றலையும்-திறமையும் இப்படலத்தில் நயம்மிகக் காட்டுகின்றான் கம்பன். இராமன் முடிசூடும் செய்தியைச் சொல்வதில் ஏளனம் தொனிக்கிறது. பெண்ணைக் கொன்றபாவி—ஆண்மைகுறைந்த கோழை அரசனாவானும் என்கிறாள் கூனி 'தாடகையைக் கொன்ற செய்தியைச் சொல்லிப் பார்க்கிறாள் அவள்.

ஆடவர் நகையுற ஆண்மை மாசுற
தாடகை எனும்பெயர்த் தையலாள் பட
கோடிய வரிசிலை இராமன் கோமுடி
சூடுவன் நாளை! வாழ்விது எனச்சொல்லினாள் (மந்—57)

இராமன்மேல் கொண்ட வெறுப்பை' இங்ஙனம் உமிழ்ந்த கூனி பரதன்மேல் கொண்டஅன்பைப் பொழிகிறாள் இலக்குவனோடு இராமனே இவ்வுலகையெலாம் ஆள்வானாயின் பரதனும் சத்துருக்கனும் காடுசென்று தவம் இயற்றுவது மேல் என்கிறாள்.

சரதம்இப் புவியெலாம் தம்பி யோடுமிவ்
வரதனே காக்குமேல் வரம்பில் காலமும்
பரதனும் இளவலும் பதியின் நீங்கிப்போய்
விரதமா தவம்செய விடுதல் நன்று என்றாள்—(மந்—64)

பரதன் ஏமாற்றப் பட்டதை உணர்ந்ததோடு தசரதன் அவனைப் பாட்டன் வீட்டுக்கு அனுப்பியதன் உட்பொருள் இப்போதுதான் புரிந்தது என்றுகூறி அலமருகிறாள் அவள். என்னகூறியும் விட்டுக்கொடுக்காமல் கேகயன் மகள் ஏற்றுக்கொள்ளாத நிலையுணர்ந்து பரதனே நின்தந்தையும் கொடியன்! தாயும் தீயளால்! என்செய்வாய் என்று கதறுகிறாள்.

பின், பரதன் அரசுரிமை பெறுவிடின் அவனிடம் உள்ள ஆற்றலும் அறிவும் ஒன்றுமின்றிக் குன்றும் என்கிறாள்.

கல்வியும் இளமையும் கணக்கில் ஆற்றலும்
வில்வினை உரிமையும் அழகும் வீரமும்
எல்லையில் குணங்களும் பரதற்கு எய்திய
புல்லிடை உகுத்த அமுது,ஏயும் போல், என்றாள்
(மந். சூ. 69)

என்னசொல்லியும் வழிக்குவராத கைகேயிடம் அவள் அடிமை வாழ்வு வாழவேண்டிய நிலையை நினைவூட்டி, தன்

தந்தை, சுற்றம் முதலானோர் வாழ்வு இராமன் மாமன் சனகனால் கெடும்என்றபின். ஒருவாறு தன்பக்கம் கைகேயி சாயக்கண்டாள் கூனி.

பரதன் ஆள வழிஎன்ன என்று தன் தாதியிடம் கேட்டு ஆலோசனை பெறவேண்டிய அளவுக்குக் கேகயன் மகள் மனம் மாறிவிட்டது.

'எது உவந்தனை......இனியைஎன் மகனுக்கும் அனையான்
புனையும் நீள்முடி பெறும்படி புகலுதி என்றாள்—(மந். சூ. 86)

பரதன் மீதுதான் கொண்ட விருப்பும்—இராமன்மீது கொண்ட வெறுப்பும் தன்னால் நிறைவேற்றிக் கொள்வதற்குச் சாதமாகத் தசரதன் கைகேயிக்குத் தந்தவரங்கள் அமைந்து விடுகின்றன. இதுவும் பெருவகையில் பொருத்தமாக அமைந்தது விந்தையே! அந்த இரண்டு வரங்களால் எண்ணியதை நிறைவேற்றிக் கொள்கிறாள் அவள்.

"இருவ ரத்தினில் ஒன்றினால் அரசுகொண்டு இராமன்
பெருவ னத்திடை 'ஏழிரு பருவங்கள் பெயர்ந்து
'திரிதரச் செய்தி ஒன்றினால்; செழுநிலம்: எல்லாம்
ஒருவழிப் படுமுன் மகற்கு உபாயம்ஈது" என்றாள்
(மந். சூழ். 89)

இராமனைக் காட்டில் அலையச் செய்யவேண்டும் என்பதே கூனியது திட்டத்தின் நோக்கம். கூனி சொல்லிய இந்த யோசனையைத் தசரதனிடம் கைகேயி மிகநயமாக மாற்றிக் கேட்கிறாள்.

'ஏய வரங்கள் இரண்டின் ஒன்றினால்என்
சேய்உலகு ஆள்வது சீதைகேள்வன் ஒன்றால்
போய்வனம் ஆள்வது'
கைகே. சூழ். பட. 14)

என்றே குறிக்கிறாள். ஆள்வது என்று குறிப்பிட்டு வரத்தின் கொடுமையை மறைத்துக் கேட்கும் சாகசத்தைக் கம்பன் நளினமாகக் கூறுகிறான். அதுமட்டுமா? தசரதனிடம் கோரிய இந்தவரத்தை இராமனிடம் தெரிவிக்கும்போதும் இன்னும் சிறிது நயமாக அமைகிறது. தன்னிடம் ஆசிபெற வந்த இராமனிடத்துத் தசரதன் கூறியவையாகப் பின்வருமாறு குறிக்கிறாள்.

'ஆழிசூழ் உலகமெல்லாம் பரதனே ஆள நீபோய்த்
தாழிரும் சடைகள் தாங்கித் தாங்கரும் தவமேற்கொண்டு
பூழிவெங் கானம் நண்ணிப் புண்ணியத் துறைகள் ஆடி
ஏழிரண் டாண்டின் வாஎன் றியம்பினன் அரசன்'

என்றாள்

கூனியின் வரத்தின் அடிப்படை இங்கே மாறுபாடு அடைகிறது. தாங்கரும் தவம் மேற்கொண்டு வருமாறு அரசன் பணித்தானும். தாங்கரும் தபத்தை 14 ஆண்டுகள் மேற்கொண்டவனுக்கு அரசபதவியில் ஆசை எப்படிவரும்? இதனைக் கேகயன்மகள் கேட்டதற்காக அவள் அறிவை வியப்பதா? கம்பன் கவியாற்றலால் இந்த இருவரங்கள் ஆட்களுக்குத் தக்கவகையில் மாறுபாடு அடைவதைக் கண்டு வியப்பதா?

எது எப்படி ஆயினும் கூனி, தான் நினைத்தவாறு பரதன் முடிபுனைய வேண்டும் என்ற எண்ணத்தை நிறைவாக்கிக் கொள்ள விரும்பினள், இராமனைத் துறத்த எண்ணினள். இரண்டையும் காப்பியம் கூறுகிறது,

விதியின் வலிமை இராமனைக் கான்செல்ல வழிகோலி விட்டது. பரதன் ஆட்சி பெறக் கைகேயிடம் கூறிய வரம் தசரதனால் ஏற்றுக்கொள்ளவும் அமைந்து விட்டது. கூனியைப் பொறுத்தமட்டில் அவளுக்கு வெற்றியே, தன்மேல் பழியைப் போட்டுக்கொள்ளாமல் பரதன் ஆள வழிகாண முயன்ற கூனியின் முயற்சி தவருகாது. அவள் கொடியவள் அல்லள், அவள் கொடியவள் என்ற முடிவுக்கு வருவதாயின் அவளைத் தூண்டிய விதியின் கொடுமையையே கண்டிக்கத் தோன்றும். ஆகலின் கூனிஎன்ற பாத்திரப் படைப்பு கம்பன்கதையுள் மிகமகிழ்ந்து ஆராய்ந்து சுவை காணத்தக்க படைப்பு.

---


## அறிவிப்பு

கரந்தைத் தமிழ்ச்சங்கம்—கரந்தைப் புலவர் கல்லூரி 29—6—64 ல் திறக்கப்பெறும்—பள்ளியிறுதி வகுப்பு அண்ணுமலை, சென்னைப் பல்கலைக்கழகப் புகுமுகவகுப்பு ஆயதேர்வுகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் பெறுவர் விவரங்கட்கும் விண்ணப்பத்தாளுக்கும் 50 ந.பை. அனுப்பி பெறலாம்.

தாளாளர்

கரந்தைப் புலவர் கல்லூரி
கருந்திட்டாங்குடி—தஞ்சாவூர் 2.

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| | | |
|---|---|---|
| துணர் | திருவள்ளுவர் யாண்டு ௧௯௯௫ | மலர் |
| | குரோதி, ஆனி. | |
| ௩௮ | 1964 ஜூன், ஜூலை. | ௩. |


## நெஞ்சில் ஒளிரும் நேரு !

ச. பாலசுந்தரம்

1 பண்பார் பெருங்கடலே! பாரதத்தின் செஞ்சுடரே!
கண்போல மக்களெலாம் காதலிக்க—நண்பாலே

2 பூவுலகம் எல்லாம் புகழ்ந்தேத்தும் கோவே!யுன்
நாவசைவை ஞாலம் நனிநோக்கிச்—சேவைசெய

3 முந்துங்கால் மூவா உலகேகச் சிந்தித்தாய்
வெந்துள்ளம் சாம்பி விழிகுருதிச்—சிந்தஉடல்

4 நொந்து புரண்டழுது நொய்மைஉரை யாற் புலம்பும்
இந்தியரின் துன்பையினி யார்துடைப்பார்—எந்தாய்

5 உலகத் தலைவனெனும் உத்தமனே உண்மை
நிலவுங் கலைவடிவே நீண்ட—புலமையினல்

6 வேண்டாப் பழமையெலாம் வீழ்த்திப் பகுத்தறிவைத்
தூண்டிவிடும் சொற்பொழிவால் சோர்வகற்றி—
ஆண்டபெரும்

7 மக்கள் தலைவா! இம் மாநிலத்தார் ஒற்றுமையைத்
தக்கவகை போற்றிவந்த சான்றோயே !—துக்கம்

8 நெஞ்சை அழுத்தளமை நீங்கிவிட்டாய் நேருவே !
தஞ்சமென யாரிடத்திற் சாருவோம்—நெஞ்சில்

9 ஒளிருகின்ற நேருப் பெருமகனே ! உன்போல்
அளிஎமக்கிங் கார்தருவார் ஐயா !—விளியாப்

10 புகழை நிலைநிறுத்திப் புத்தேள் நாடுற்றாய்
துகளாக எங்கெங்குஞ் சூழ்ந்தாய்—நிகழ் உலகில்

11 "மக்கட் தலைமை" எனும் வான்பயிர்க்கு மாமழையே !
திக்கற்ற நாட்டார் செவிலியே !—முக்காலும்

12 கொண்டநடுவு நிலை கோடாப் பெருஞ்சுடரே !
எண்டிசையும் போற்றும் இயலரசைக்—கண்டளித்த

13 மேதையே உள்ளன்பின் மேருவே உண்மைவழி
நீதி செலுத்திநின்ற நித்திலமே—கோதகன்ற

14 மாணிக்க மே ! உன்றன் மாசகன்ற கொள்கையினைப்
பேணிச் செயல் புரிவோம் என்றுன்மேல்—ஆணை
அளிக்கின்றோம் ஐயா ! அருள்

# உலகமே என் நாடு!

புலவர். தி. நா. அறிவுஒளி

ஒரு காலத்தில் வல்லாண்மைதான் சீரிய ஆற்றலாகக் கருதப்பட்டது. 'போர்' தான் ஒருநாட்டின் (அரசின்) ஆற்றலுக்கு அறிகுறியாக (அடிப்படையாக) அமைந்திருந்தது. 'ஒருவனை யொருவன் அடுதலும் தொலைதலும் புதுவதன்று இவ்வுலகத் தியற்கை' (புறம் : 76—இடைக் குன்றூர் கிழார்.) என நம்பிவந்தனர். இந்தக்கருத்து மிகப்பழைய, பிற்போக்கான கருத்து.

'போர்—பண்பில்லா வெறிச்செயல்' என்ற உண்மையை உணர்ந்து அக்கயமையைக் கைவிட உலகம் கற்க வேண்டும். உலகில் ஒரு சிறு கொலைக்கருவி கூட இருக்கக் கூடாது என்பதே என் அவா. கொலைக்குருவி இருக்கும்வரை பண்பு வளர்ச்சியில் குறைபாடு இருந்து கொண்டுதான் இருக்கும். 'உலகஒற்றுமை உணர்வு' வளரவேண்டும் என்ற மனப் பான்மையை இன்னும் அரசியலாளர்கள் போதிய அளவு நம்பவில்லை. ஆயின், இந்நிலை நெடுநாள் நிலவப்போவதில்லை, அறத்தை நம்பும் அரசியலாளரே உண்மையில் மக்கட் பண்பினர் ஆவர்.

உலகில் படைவன்மையை வளர்ப்பதால்தான் போர் வெறி மிகுதியாகிறது. படைவன்மை மீதுள்ள நம்பிக்கையை அரசுகள் குறைத்துக் கொள்ளவேண்டும். அந்த அறிவுடைமை வளர்ந்தால் அரசியல் வளம் உலகில் உண்மையில் அமைந்துள்ளது என்பதை நம்பலாம்.

பேரறிஞர் 'பெட்ரண்ட் ரச்சல்' போன்றோர் 'போர் மறுப் பியக்கத்தை' உருவாக்கி' மேலை நாடுகளிலும் பூங்குன்றனாரின் கொள்கையை முழங்கி வருகின்றனர். உலகநாடுகள் மன்றத் தின் செல்வாக்குக்கு நல்லதொரு மதிப்பு மேலும் வளரவேண் டும். அனைத்து நாடுகளும் 'உலக நாடுகள் மன்றத்தின்' கருத்தை மதித்தொழுகும் மனப்பண்பினை அடைய வேண்டும் சிலபல நிலைகளில் ஓரிரு நாடுகள் தம்கொள்கையை, விருப் பத்தை விட்டுக்கொடுக்கத்தான் நேரும். அத்திருப்பணியை உலக அமைதிக்காக—மன்பதை நலனுக்காகத் துறந்துவிட வேண்டியது நனிமிக இன்றியமையாததே.

'நிகழ்காலத்திற்கு இரையாகும் மனப்பான்மை' உலகில் மிகுந்துவருகிறது. இது மாறவேண்டும். நிகழ்கால வாழ்வோடு பொருந்தியே வாழவேண்டும்; ஆனால் அது குறித்த நல்ல

வரையறையில் மட்டுமே அமையவேண்டும் என்பதே என் கருத்து.

உள்ளச்சான்றைப் பிணமாக்கிவிட்டு, உலகில் வாழ வேண்டும் என்ற நிலை இழிவுகளுள் தலையாய இழிவாகும்.

'பகையை வெல்லும் வழி, அப்பகைவனை அழிப்பதே என்ற கொள்கையை உலகம் இனித் துறக்கவேண்டும். 'பகையை மட்டும் அழிக்கலாம்' ஆயின், பகைவனை அழிக்கக் கூடாது' என்ற தெளிவு உலகமக்களுக்கு நன்கு அறிவுறுத்தப் படவேண்டும். இம்மேதகு பண்பு உலகில் இன்னும் போதிய அளவு நம்பப்படவில்லை. இக்கொள்கையை நம்புபவர்களையும், பிறர் ஏமாற்றி அழிக்க முனைகின்றமையும் காண்கிறோம். இத்தகு இழிநிலையைக்களைய 'உலக அமைப்பு' செயல்பட வேண்டுமானால் அனைத்து நாட்டு மக்களோடும் உலகமன்றம் நேரடித் தொடர்பு கொள்ளவேண்டும். அதேபோல உலக மாந்தர்கள் 'உலக மன்றத்தை' மதித்து வழிபட்டொழுகும் ஆன்றதகுதி பெறவேண்டும்.

ஒருநாட்டு ஆட்சி 'உலகமன்றத்தின்' கட்டளையை மீறினும், அந்நாட்டுமக்கள்பால் அம் மன்றம் தொடர்பு கொண்டு, அந்நாட்டு ஆட்சியைத் திருத்தக்கூடிய செயலாற்றல் உலகமன்றுக்கு அமையவேண்டும். இந்நெடிய கனவு பலருக்குத் திகைப்பை யூட்டலாம். ஆயின் இது நிறை வேற முடியாததோ; இயற்பகை கற்பனையோ அன்று. அத்தகு ஆற்றல் 'உலகமன்றத்துக்கு'க் கிட்டிவிட்டால் 'உலக ஓரரசுக்'க் கொள்கைமிக எளிதில் உருவாகிவிடும். அது மட்டுமன்றிப் 'போரற்ற இன்பவாழ்வில்—நம்பிக்கையான அமைதி வாழ்வில்'—ஞாலமக்கள் ஆறுதலோடு திளைக்க முடியும்.

'எவ்வகையான அடிமைத்தளையும் கொடுமையானது தான். கொடியது மட்டுமன்று; விரும்பத் தகாததும்தான்! அறிவில் அடிமைத்தளை யமைந்தாலும், அதனால் தீமையே விளையும்.

போரை நம்பும் மனப்பான்மை ஒரு அடிமை மனப் பான்மையே, அக்கொள்கையை நம்பும் அரசும், நாடும் நேர்மைவழியில் அறத்தாற்றில் இயங்க முடியாது. பிறரை அடக்கி அடிமையாக்க எண்ணுபவன் கொடுமையைப் போற்றிக் கைக்கொள்ளுவான். பிறநாட்டை அடக்கி அடிமை கொள்ள எண்ணும் அரசும் போரைப்போற்றும்; கையாளும் இந்நிலை இன்றைய உலகஅமைப்பில் நேரக்கூடாது. அவ்வாறு இருநாடுகள் முரண்பட்டால்; உலகமன்றம் அவை போரிடாது தடுக்கும். அத்துடனமையாது ஏனைய நாடுகள்

அவ்விருநாடுகட்கும் அறிவுரை கூறிப் போரெழாதவாறு தடுக்கவேண்டும், இதற்காவனவற்றை உலக அறிஞர்கள் உருவாக்க வேண்டும்.

பரந்த நோக்கம், விரிந்தகொள்கை, உலகை அளாவிய குறிக்கோள், உலக உணர்வு ஆகியவைதான் வருங்காலத்தில் பாராட்டப்பெற்று வலிபெற்றுச் சிறக்கும். எந்த நாட்டுக்கும் யாரும் எப்போதும் எத்தகு தடையுமின்றிச் செல்லவும் வரவும் கூடிய அன்புநிலை உண்டாக வேண்டும்.

நாடுகளின் எல்லைகளை மனிதன்தான் படைத்துக் கொண்டான். எல்லைகளை, வேலிகளைப் புறத்தில் மட்டுமின்றி அகத்திலும் உருவாக்கி அமைத்துக் கொண்டானே; அதுதான் மிகமிக இரங்கத்தக்கது! இந்த அவலத்தைப் போலக் கொடியதுன்பந்தருவது வேறு எதுவுமில்லை.

மாந்தரினம் ஒரே உயிராற்றலினத்தில் வழித்தோன்றியதே. அவர்கள் இடவாய்ப்புக்காக நாடுகள் கண்டனர்; வாழ்க்கைச் செம்மைக்காகத் தனியரசுகள் அமைத்தனர். அந்தத் தெளிவை மறந்து அறியாமையால் பலப்பல பூசல்களை இதுவரை விளைத்தனர். ஆயின் இனித்திருந்தி வாழ்வதே அறிவுடைமைக்கழகு.

குறுகிய நாட்டுப்பற்றுகளால் உலக ஒருமைப்பாடு— உலக அமைதி சிதையுமோ என அஞ்சுகிறேன். எந்த நிலையிலும், எந்தக் காரணத்திற்காகவும் அமைதி குலைவது உலகத்துக்குப் பெருந்தீங்கே பயக்கும்.

இன்று உலகினர் நம்பிப் போற்றியொழுக வேண்டிய வாழ்வறங்கள் இரண்டே! அவை:

"யாதும் ஊரே யாவரும் கேளிர்!" "என் நாடு இந்த உலகமே!"

---

வெல்லுந் தமிழ்மொழிக்கு நேர்—இனி
இல்லை எனஉணர்ந்து தேர் —(வெல்)

செல்லல் புரியவந்த தீயர்உளம் புழுங்கத்
தேர்ந்த கருத்துரைத்துச் சீறிஎழுந்து பகை —(வெல்)

அல்லல் தவிர்த்தடிமை நீக்கி உணர்வெழுப்பி
ஆண்மை யளித்தறிவின் மேன்மை புகன்றுபகை —(வெல்)

வில்லும் கணையும்வெட்டு வாளும் படையுமின்றி
வீரம் பெருக்கிநமக் கார்வம் புரிந்துபகை —(வெல்)

ச. பாலசுந்தரம்

# நன்றே செய்க!

## ஆசிரியர்: கோ. கோவிந்தசாமி (திருமுக்கூடல்)

ஞாலத்தில் வாழும் மாந்தர் தம் வாழ்வில் இன்பம் வருங்கால் இன்புறுவதும் துன்பம் வருங்கால் துன்புறுவதும் இயல்பாக உள்ளது. பேதை மாந்தர் இன்பமும் துன்பமும கலந்ததுதான் வாழ்க்கை என எண்ணுவதில்லை. துன்பம் நேரும்போது இவ்வுலகையே வெறுத்து விட்டவர்போல் தோன்றுகின்றனர். சிலர் ஆனால் மாண்பு மிக்க சான்றோர்கள் துன்பத்தைக் கண்டு சிறிதும் அஞ்சுவதில்லை. மாறாக மகிழ்கின்றனர். தாம் வாழ்க்கையில் சிறந்து விளங்கத் துன்பம் துணையாக நிற்கிறது என எண்ணி எச்செயலையும் நன்முறையில் ஆற்றுகின்றனர். தம் துன்பத்தைப் போக்கிக் கொள்வதற்காக அவர்கள் தீயபாதையில் செல்வதில்லை. இன்பத்தையும் துன்பத்தையும் ஒன்றாகக் கருதித் தமக்காக வாழ முற்படாமல் பிறருக்காக வாழ முற்படுவர். தாம் துன்புறினும் கவலையுறாமல், பிறர் துன்பத்தைக் களைவதையே பெரிதாகக் கருதுவர். பிறரின் நன்மையையே விழைந்து நிற்பர். தம் வாழ்நாளில் ஏதேனும் ஒரு செயலைச் செய்தல் வேண்டும். அச் செயலும் தீச் செயலாக இராமல் என்றும் நிலைத்து நிற்குமளவிற்கு நற்செயலாக இருத்தல் வேண்டும் அதைப் பிறகு செய்வோம் என எண்ணி இருந்துவிடாது விரைந்து முடித்தல் வேண்டும் என்கிறார் ஒரு பெரியார்.

ஒன்றே செய்க நன்றேசெய்க அதை இன்றே செய்க,

எச்செயலையும் இன்றே... தாம் கருதிய போதே செய்தல் வேண்டுமெனக் கூறுவது ஏன்? நாளை செய்தல் கூடாதா எனின் நாளை என்பதே கூடாது என்கிறார் அப்பெரியார்.

நாளை நாளை என்னாதே நாளைவீணில் போக்காதே
நாளை எங்கே போவோமோ நாளை என்னநேர்ந்திடுமோ,

மாந்தரின் யாக்கை நிலையற்றது. நிலையான யாக்கையைப் பெறவிழைவர் தம் நாட்டிற்கும், மொழிக்கும் விரைந்து தொண்டாற்றுதல் வேண்டும் அப்போதுதான் மாந்தராகப் பிறந்ததன் பயனை அடைய இயலும். நன்றே செய்தல் வேண்டுமென எண்ணி எதையும் செய்யாமலிருப்பினும், நாளை செய்வோமெனக் கருதியிருப்பினும் அந்நாள் மாந்தருக்கு உரிய நாளாக இராது. உலகு அத்தகைய பெருமையை உடையது என்பதை நன்கு விளக்குகிறார் திருவள்ளுவர்.

நெருநல் உளனொருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு

நேற்று இருந்தவர் இன்று இல்லை என்னும் பெருமையை உடைய இவ்வுலகில் வாழும் மாந்தரிற் சிலர், நற்செயல்களை ஆற்ற வேண்டுமென எண்ணுவதே இல்லை. மிக்க அழுக்காறும், பொருள்மீது அளவிலா அவாவும், பிறர்பால் வீண் பகைமையுங் கொண்டு அலைந்து திரிகின்றனர். தாம் இன்புறுவதற்காகப் பிறரைத் துன்புறுத்தத் தயங்குவதில்லை. நல்லதுதான் செய்ய இயலவில்லையே...தீமையாவது செய்யாமலிருப்பின் நன்றல்லவா? அதுவுமில்லை; தீமைபுரிவதையே சிறந்த தொழிலாகக் கொண்டுள்ளனர். பிறர்க்கு நல்லது செய்ய இயலாவிடினும், தீமை செய்யாமலிருப்பின் அதுவே ஒருவரை நன்னெறியின்கண் செலுத்தக் கூடிய நெறியாகும்.

> "பல்சான்றீரே பல்சான்றீரே
> கயல் முள் அன்ன நரை முதிர் திரைகவுட்
> பயனின் மூப்பின் பல்சான்றீரே
> கணிச்சிக் கூர்ம்படை கடுந்திறலொருவன்
> பிணிக்குங்காலை இரங்குவீர் மாதோ
> நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
> அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
> எல்லாரும் உவப்புதன்றியும்
> நல்லாற்றுப்படூஉம் நெறியுமாறதுவே."

என்ற புறநானூற்றுப்பாடல் மூலம், பிறர்க்கு நல்லது செய்ய இயலாவிடினும் அல்லது செய்யாமலிருக்க வேண்டிய அவசியத்தை நன்குணரலாம். "யாதும்ஊரே யாவரும் கேளிர்" என நவின்ற பூங்குன்றனாரின் கருத்தை மேற்கொண்டு, பிறர்க்குத் தீமை செய்தலைத் தவிர்த்து வாழ்தல் நன்றாகும். சான்றோர் கேண்மையைப் பெற்று ஒழுக்கத்தை உயிரினும் மேலாகக் கருதி வாழின் மாந்தர் வாழ்வு சிறந்து விளங்குமென்பதில் ஐயமில்லை.

## இன்சொல்தரும் இன்பம்

இனிய சொற்கள் என்றும் இன்பம் பயக்கும். பிறர் மனம் புண்படுவதற்குக் காரணமாக இருப்பது வன்சொற்களேயாகும். நாம் எச்செயலைவும் இனிய சொற்களின் மூலம் மிக விரைவில் செய்துமுடிக்க இயலும். வன்சொற்களின் மூலம் எச்செயலையும் செய்ய இயலாது.

ஐந்து அகவையும் நிறைவுறாத இளஞ்சிறுவன் ஒருவனை அழைத்து...தம்பி...எனக்கு ஓர் உதவி செய் என்று பணி ஒன்றினை இடின் அவன் அப்பணியைத் தயங்காது செய்ய முற்படுவான். மாறாக...ஏ...மூடா,..உடனே நான் இடும் பணியைச் செய் எனக் கடுகடுப்புடன் கூறின் அப்பணியை

இறுதிவரை செய்ய முற்பட்டான். சிறுவன் மட்டுமன்று.. நம்மிடம் பழகும் எவரிடமும் இன்சொற் கூறின் அது நமக்கு நன்மையை விளைவிக்கும். ஆனால் மாந்தர் இன்சொல் கூறுவதைத் தவிர்த்து வன்சொல் கூறுகின்றனர். இன்சொல் இன்பம் தரும் என்பதை உணர்ந்தும் அவ்விதம் கூறுவது யாது காரணத்தால்.

“இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன் சொல் வழங்குவது.

என்கிறார் வள்ளுவர் பெருந்தகை.

இன்சொற்கள் இயம்புவது நன்று என உணர்ந்திருந்தும் சிலர் தமக்குக் கீழுள்ள எளியவரிடம் கடுஞ் சொற்கூறி அவர்களைத் துன்புறுத்துகின்றனர்; தீயினாற் சுட்டபுண் விரைவில் ஆறிவிடும். ஆனால் நாவினால் சுட்டவடு என்றும் ஆறாது என அறிந்தவர்கள் பிறரிடம் கடுஞ்சொற்கூறுவது இனிய கனி இருக்க அதனை உண்ணாது இன்னாத காயைத் தின்னும் செயலையே ஒக்கும். இன்சொல் தனக்கு உளவாயிருக்கக் கடுஞ்சொல் கூறுவதை.

“இனிய உளவாக இன்னாத கூறல்
கனி இருப்பக் காய் கவர்ந்தற்று”

என நவில்கிறது தமிழ்மறை.

அறம் செய்தல் சிறந்தது எனக்கூறும் சிலர் தாம் அறம் செய்ய முயலும்போது தம் கடுமையான முகத்துடன் மீண்டும் தம்மை எவரும் அணுகாதவாறு தோன்றுவர். எளியோர் அவரைக்கண்டதும் அஞ்சி எதையும் அவரிடம் கேட்க விழையாது விரைந்து சென்று விடுவர், முகத்தில் கடுமை தோன்றச் செய்யும் அறம் அறமன்று. தம்மை நாடிவருபவர்களை இன் முகத்துடன் வரவேற்று, இனிதாக நோக்கின் அதுவே ஓர் அறமாகும். முகம் மலர்ந்து இனிய சொற்களைச் சொல்வது மன மகிழ்வுடன் அளிக்கும் ஈகையை விட நன்றாகும்.

“முகத்தானமர்ந்து இனிது நோக்கி அகத்தானும்
இன் சொல்லினதே அறம்”

வேழத்தில் பட்டு உருவும் அம்பானது பஞ்சின்மேல் பாயாது. நெடிய இருப்புப் பாரைக்குப் பிளவாத கருங்கற் பாறையானது பசு மரத்தின் வேருக்குப் பிளந்துவிடும். அதேபோல் வன்சொல் தோற்கும். இன்சொல் வெல்லும் என்பதை.

“வெட்டெனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்தில்
பட்டுருவும் கோல் பஞ்சிற்பாயாது—நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப்பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்குவிடும்”

என இயம்புகிறது நீதி வெண்பா.

# திருவடி சூடிய பெருந்தகை

த. இராமநாத பிள்ளை
(யாழ்ப்பாணம் பருத்தித்துறை)

நரை தோன்றிற்றாகத் தசரதன் மூத்தமகன் இராமனுக்கு முடிசூட்டுதற்கு ஐம்பெருங் குழுவினரோடு ஆலோசித்தான். அரசு செலுத்தலில் ஆசையில்லாத இராமபிரான் தந்தை சொல்லை மீற அஞ்சி முடி ஏற்க இசைந்தனன். பட்டாபிடேக நாளைவசிட்டன் முதலியோர் குறித்தனர். இதை அறிந்த கைகேசி தன் மகன் பரதனை முடிசூட்டுவான் விழைந்து தனது நாட்ட முயன்றாள். சம்பராசுரனோடு தன்கொழுநன் அமர் செய்த காலை; கைகேய தேர்கடாவி உதவியமையால் இருவரங்கள் அளிக்கப் பெற்றிருந்தாள். அவ்விருவரங்களையும் இத்தருணத்தே பெறவேண்டுமெனத் துணிந்தாள். தசரதனை அவ்வரங்களை ஈதற்கு இசைவித்து இராமனைக் கூவித் தான் பெற்ற வரங்கள் இத்தன்மையன என அறிவித்தனள்,

> "ஆழிசூ ழுலக மெல்லாம் பரதனே யாள நீபோய்த்
> தாழிருஞ் சடைக டாங்கித் தாங்கருந் தவமேற் கொண்டு
> பூழிவெங் கான நண்ணிப் புண்ணியப் புனல்க ளாடி
> ஏழிரண் டாண்டின் வாவென் றேவின னரச னென்றாள்"

"பின்னவன் பெற்ற செல்வம் அடியேன் பெற்றதன்றோ" என இராமன் புகன்று மனமகிழ்ச்சியுடன் தந்தையரின் விருப்பத்தை நிறைவேற்றுதற்கு நகர் நீங்குதலை மேயினான்.

---

குயில் கூவுவதைக் கேட்டு மகிழும் இவ்வுலகம் கர்த்தபத்தின் ஓசையைக் கேட்டு அறுவறுக்கிறது. குயில் உலகிற்குச் செய்த நன்மையாது? கர்த்தபம் செய்த தீமையாது? என்பதை ஆராயப் புகின் குயில் இனிய ஓசையை விரும்பும் உலகம் கர்த்தபத்தின் ஓசையைக் கேட்டு வெறுப்படைவதே காரணமாகும்.

> "மென்மதுர வாக்கால் விரும்பும் சகம் கடின
> வன் மொழியாலிகழும் மண்ணுலகம்—நன்மொழியை
> ஓதுகுயிலேதங் குதவியது கர்த்தபந்தான்
> ஏதபராதஞ் செய்தது இன்று"

எனக் கூறுகிறது நல்வழி.

"இன் சொலால் அன்றி இருநீர் வியனுலகம் வன்சொலால் என்றும் மகிழாதே" என்ற ஆன்றோர் கூற்றுக்கிணங்க இன்சொல் கூறுதலால் அடையும் இன்பத்தைத் தெளிவாக அறியலாம்.

"தும்பிக்கு நானிலம் கொடுத்து வாழுதி யென விளம்பிய கௌசலை தன் மகன் தன்னைப்பிரிந்து காடேக வேண்டு மென்பதைக் கேட்டுப் பெரிதும் புலம்பினாள். தன்னை உடன் அழைத்துச் செல்லும்படி தாய் வேண்டினளாக, தருமமே உருவெடுத்துப் பிறந்த இராமன் 'அறத் தினின்று வழுவினாய், எனத் தாய்க்கு உணர்த்தலுற்றான்.

"என்னை நீங்கி இடர்க்கடல் வைகுறும் (று)
மன்னர் மன்னனை வற்புறுத் 'தாதுடன்
துன்னு கானம் படரத் துணிவதே
அன்னை யேயறம் பார்க்கிலை யாமென்றான்"

என்பிரிவினால் வருந்தும் எந்தையை ஆற்று விப்பதே உமது கடமை என இராமன் வற்புறுத்துனான். மகன் வனஞ் சென்றால் கொழுநன் இறப்பது நிச்சயம்: மகனைக் காடுசெல் லாது தடுத்தால் மன்னன் புகழைக் கெடுத்தல் நிச்சயம் என இருதலைப்பட்டு அலமந்தாள் கௌசலை,

இஃதிங்ஙன மாக, அரசியல் நீதியினின்று வழுவி இராமனை நாடு கடத்தற்கு மன்னன் இசைந்ததை அறிந்த இலக்கு மணன் போர்க்கோலமோடு நகர வீதியில் திரிந்து வீரவாதம் செய்து தன்வலிமையால் தமையனை முடி சூட்டுவேன் எனச் சபதஞ் செய்தனன். தமையன் இதை அறிந்து சீற்றத்தின் காரணத்தை வினவிய பொழுது தாய்தந்தையர் நீதிநெறியின் நீங்கிய சமயத்தில் சீற்றம் கொள்ளாதிருத்தல் தருமமாகா தென்றான். தந்தை தாயார் மீது சினங்கொள்ளுதல் தவ றெனவும் பெற்றோர் சொல்லை மீறுதல் பிழை யெனவும் விதியை எதிர்க்காமல் அமைய வேண்டுமெனவும் இராமன் விளக்கித் தம்பியின் சீற்றத்தை ஒருவாறு தணித்தனன்.

பின்புதன் குருவாகிய வசிட்டன் மன்னவன் காடேகு மாறுபணிக்க வில்லை எனவும் கானகம் சென்றால் மன்னவன் இறப்பன் எனவும் சில நியாயங்கள் கூறி இராமனை நகர் நீங்காதிருக்கும்படி வேண்டினான். கானகம் செல்லுதலைத் தடுத்தல் முறையன்றென இராமன் உணர்ந்தானாக, வசிட்டன் நியாயம் சொல்ல வியலாதிருந்தனன். அத்தருணத்து நகரத்து நன்மக்கள் இளங்கோ நகர்நீங்குதலை அறிந்து அழுது புரண்ட பொழுதில் இராமன் குடிகள் மீது இரங்கினான். இரங்கிய போதிலும் தந்தை சொல்லை நிறை வேற்றுதல் தன்கடன் எனத் தீர்மானித்து அறத்தின்வழி நின்ற பெருமை இராம னுக்கு உரியதே. இதுநிற்க.

கேகேய நாடு சென்றிருந்த பரதன் அயோத்தி திரும்பி வந்து தந்தையைப் பார்க்க விரும்பினானாக, அவன் தாய்

தான் அறநெறியினின்று வழுவியதைச் சற்றும் சிந்திக்காமல் தசரதன் துஞ்சியதை அறிவித்தான்.

> "வாக்கினால் வரந்தரக் கொண்டு மைந்தனைப்
> போக்கினேன் வனத்திடைப் போக்கிப் பாருனக்கு
> ஆக்கினேன் அவனது பொறுக்க லாமையால்
> நீங்கினான் தன்னுயிர் நேமி வேந்தனென்றாள்".

இங்ஙனம் தந்தை இறந்த வரலாற்றைத் தாய் கவலையின்றிச் சொல்லக் கேட்ட பரதன் உறுதுயருற்றான்' தமையனுக்கு அநீதி செய்யப்பட்டதை உன்னி உன்னி துயர்நீக்க வியலாமல் தவித்தான்.

> "கொடியவெங் கோபத்தாற் கொதித்த கோளரி
> கடியவ டாய்யெனக் கருது கின்றிலன்
> நெடியன் முனியுமென் றஞ்சி நின்றனன்
> இடியுரு மனையவெம் மொழியி யம்புவான்

தாயைக் கொன்றால் தன் வினையைத் தீவினையெனக் கண்டிப்பன் தமையன் என்று அஞ்சினன் பரதன். அரசைத் தமையனுக்கு அளித்து அறத்தின் வழிநிற்றலே தலையாய ஒழுக்கமெனப் பரதன் துணிந்தமையே பரதனின் பெருந் தன்மையைத் துலங்கச்செய்யும். தாயின் சூழ்ச்சியால் தமயன் கானகம் செல்லவும் தந்தை இறப்பவும் தான் அரசாளுதல் பழியெனப் பரதன் துணிந்து பெரும்புகழ் பெற்றானன்றோ.

> "வில்லார் தோளான் மேவினன் வெங்கா னகமென்ன
> நல்லா னன்றே துஞ்சினன் நஞ்சே யனையாளைக்
> கொல்லேன் மாயேன் வன்பழி யாலே குறைவற்றேன்
> அல்லே னேயா னன்புடை யார்போல் அழுகின்றேன்"

இன்னணம் பெரும் பழிக்கு ஆளாயினமையை எண்ணிப் பரதன் தீர்க்கொணாக் கவலை கொணடான். தன் ஒழுக்கத்திலும் அன்பிலும் சான்றோர் ஐயுறுரோ எனப் பெரியோன் அரற்றி அழுதான். இப்பழியை விலக்குதற்கு மாதவம் முயலுதலே செயற்பாலதெனப் பரதன் எண்ணினன். தான் அரசை ஏற்பின் நரகடைதல் திண்ணம் எனக் கௌசலைக்குச் சொன்னகை, கௌசலை பின் வருமாறு வாழ்த்துதலைக் காண்க.

> "முன்னை நுங்குல முதலு ளோர்கடாம்
> நின்னை யாவரே நிகர்க்கு நீர்மையால்
> மன்னர் மன்னவா வென்று வாழ்த்தினாள்.
> உன்னி யுன்னிநைந் துருகி விம்முவாள்".

மன்னர் மன்னவா எனத் தமையனை அழைக்க வேண்டிய சொல்லால் தன்னை வாழ்த்தியதை நினைந்து பரதன்

மனமுருகி நனிதுயருற்ருன். இறையிலா அரசு பாழாகு மாகலான், அரசாளும்படி அமைச்சர் முதலியோர் பரதனை வேண்டினர்; "தஞ்சமே, உலகம் நீதாங்குவாய்" என வசிட்டன் கூறலும், பரதன் நஞ்சினை நுகரென நடுங்கு வாரினும் அஞ்சி அயர்ந்தனன், அயர்ந்த பரதன் மூத்தவன் இருக்க இளையோன் அரசாளுதல் முறையோ எனச் சபையோரைக் கேட்டனன். இராமனுக்கு முடி சூட்டுவென் அன்றேல் அவனோடு கூடித் தவஞ் செய்வல் என உறுதி கூறித் திகழ்ந்தான்.

இம்மாநோக்கத்தினனாய்ப் பரதன் தமையனைத் தேடிக் கங்கைக்கரை யடைந்தான். பரதன் சேனையோடு வருதலைக் கண்ட குகன் இராமபிரானை நாடு கடத்தியது மன்றிக் கொல்லவும் வருகின்ருனே என ஐயுற்றுப் போர்செய்தற்கு ஆயத்த மாகநின்ருன். குகனைத் தோழன் என இராமன் பாராட்டியதைச் சுமந்திரனால் உணர்த்தப்பெற்ற பரதன் வேடன் அடியில் விழுந்து வணங்கினான். இச்சீரிய வொழுக்கம பரதனது ஒப்பற்ற பண்பாட்டினை உலகெங்கும் என்றும் நிலை நாட்டாமல் நிற்குமோ? தமையன் சென்ற திக்கை நோக்கித் தொழுகையினனாய்த் தனியே வந்த பரதன் அறநெறி வழுவினான் அல்லன் எனத் துணிந்தான் குகன் படைவலிக்கு அஞ்சிக் குகன் பரதனை வணங்கினான் அல்லன்; அவனுடைய அறநெறி சாலச் சிறப்புடையதென மெச்சியே குகன் பரதனடி விழுந்து வணங்கினான்.

"தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத்
தீவினை யென்ன நீத்துச் சிந்தனை முகத்திற் றேக்கிப்
போயினை யென்ற போழ்து புகழினோய் தன்மை கண்டால்
ஆயிர மிராமர் நின்கே ழாவரரோ தெரியி னம்மா."

எனக் குகன் பரதனைச் சிறப்பித்துச் சீராட்டுதலைச் சிந்திப்போமாக.

பின்பு பாரத்துவாச முனிவன் முதலியோரோடு பரதன் சென்று தமயனைக் கண்டனன். பின்வரும்செய்யுள் பரதனின் தூய மனநிலையை ஓவியம் போல் காட்டா நிற்கும்.

"தொழுதுயர் கையினன் துவண்ட மேனியன்
அழுதழி கண்ணினன் அவல மீதென
எழுதிய படிவமொத் தெய்து வான்றனை
முழுதுணர் சித்தையன் முடிய நோக்கினான்."

பின்பு தந்தைக்கு நீர்க்கடன் முதலியன செய்தபின் அமைச்சரோடு இருந்துழி இராமன் தந்தை இறந்தமையால் அரசு

னைதே என் உரைத் தாளுகப் பரதன் நனி வருந்தினுன். தாய் செய்த தீமை நீங்க அரசு தவிர்க்கின்றேன் எனப் பரதன் மொழிந்தனன்.

" நிறையி னீங்கிய மகளிர் நீர்மையும்
பொறையி னீங்கிய வறமும் பொங்கருள்
துறையினீங்கிய வறமுந் தொல்லையோ
முறையினீஙகிய வரசின் முந்துமோ.

தீமைகள் யாவற்றுள்ளும் தீமையாவது முறையினீங்கிய அரசேயாகலின், அரசெத்துறந்தேன்; அரசாளுதற்குரியவன் நீயே யாகலின் நகர் திரும்ப வேண்டுமெனத் தமயனைப் பரதன் வேண்டினன். அப்பொழுது பின்வரும் சில நியாயங் கள் கூறி இராமன் அரசைத் தவிர்த்தான். நல்லொழுக்கமும் சத்தியமும் நீதியும் தருமமும் அரசனது ஆணையால் நிலைக் கின்றன; அரசன் சொற்போல் குரவர் சொல்லும் பெருமை யுடையன; தந்தை தாயர் ஒப்பற்ற குரவராகலின் தாய்வரம் வேண்ட தந்தை உதவிய அரசைத் தவிர்த்தல் நல்லொழுக்க மாகுமோ என இராமன் இயம்பினுன்; தான் அரசை ஏற்றுத் தந்தையைப் பொய்யனுக்குதல அறநெறியோ என்ருன். தான் பதினுன்கு வருடம் கானகத்தில் வைகப் பரதன் பாரகம் ஆளுதல் கடமை; இதுவே தன் ஆணை என்ருன் அப்பொழுதும் பரதன் முடி சூடுதற்கு இசையவில்லை, வசிட்டன்தான் கல்விபயிற்றிய குரவனுகையால் தன்னுணையை மறுக்காமல் அரசாளுதியென இராமனை வேண்டினன் தந்தையின் வாக்கை ஏற்றபின் மறுத்தல் பிழை யன்ருே நீயே சொல் வாய்'' என இராமன் மறுமொழி உரைத்தான். அத்தருணத் தில் பரதன் தான் கானகம் படர்தல் மெய்' என்ருன் இவ் வண்ணம் தமையனும் தம்பியும் அறநெறியில் நின்றனராக, அமைச்சர் முதலியோர் அலமுந்து நின்றனர். அவ்வேளையில் இராமன் தந்தைசொல் புரத்தலும் பரதன் பதினுன்கு ஆண்டு செங்கோல் செலுத்தலும் முறை என்பது பொதுக் கருத்தாயிற்று.

" ஆமெனின் ஏழிரண் டாண்டில் ஐயநீ
நாமநீர் நெடுநகர் நண்ணி நானிலம்
கோமுறை புரிகிலை யென்னிற் கூரெரி
சாமிது சரதநின் னுணை சாற்றினேன்.''

எனப்பரதன் மொழிந்து திருவடி நிலை கூடி அறத்தின் வழி நின்று உயர்ந்தான்'

# செயப்பாட்டு வினைச்சொல்

## PASSIVE VOICE-FORM

வித்துவான் ஞானசம்பந்தம்

இந்தச்சொல் நயம்புலவர்கள் செயப்பாட்டுவினை வடிவமாக "செய்படு" என்பதை அறவே கைவிட்டார்கள். "செயப்படு" என்பதை மட்டும் கையாண்டனர், வளர்த்தனர்.

படிக்கத்தெரியாத பாமரர்கள். அல்லும் பகலும் உழைக்கும் உழைப்பாளிகள் முதலியவர்கள்" எச்சவடிவ வரையறையை' அறியவில்லை. அறியும் அளவு ஓய்வில்லை. மேலும் மிக நீண்ட தொடர். இக்காரணங்களால் "கொல்லப் படு" என்பது மக்கள் பேச்சில் எடுபடவில்லை.

ஆக

செய்படு-என்ற இயற்கையான செயப்பாட்டுவினை வடிவம் புலவரிடம் இறந்தது; நிலைக்கவில்லை.
செயப்படு-என்ற செயற்கையான வினைவடிவம் மக்களிடம் வழங்கவே இல்லை.

புலவர்கள் இலக்கணம் என்றுஎண்ணி ஏனையபுலவரிடம் பேசும்பொழுதே "செயப்படு" என்றனர். ஏனைய வேளைகளில் அவர்களுடைய வாயிலும் 'செயப்படு' நுழையவில்லை. எப்படி நுழையும்? அவர்களும் மனிதர்தானே? குடிவெறியில் உளறும் மனிதன் நன்னிலையிலுமா உளறுவான்? இல்லையே! இவ்விதமே இலக்கணவெறியில் உளறிய (பேசிய) மனிதன் (புலவன்) நன்னிலையில் (சாதாரண சமயத்தில்) பேசவில்லை. பேசவாய்வரவில்லை.

இவ்விதம் செயப்பாட்டுவினை நாளடைவில் இறக்கத் தலைப்பட்டன. ஏனெனில் சொல் மக்களுடைய பேச்சில் இறந்தால் செத்தது என்று பொருள், எழுதப்படாவிட்டால் விரைவில் மறைந்துவிடும். மண்ணிலே புதையுண்ட பிணம் போல மக்கி மறைந்துவிடும். இதற்கு உதாரணங்கள் தேவையில்லை, சங்க இலக்கியம், தொல்காப்பியம் முதலிய வற்றை ஒருமுறை பார்த்தால் போதும். மொழிவரலாறு, மொழியியல் நூல்களை ஒருமுறை புரட்டினால் போதும்.

இதுகாறும் சொன்னதால் செயப்படுவினை—செயப் பாட்டுவினை என்றால் ஏன்? ஏற்பட்டது? எப்படி இருந்தது? எதனால் இறந்தது? என்பதெல்லாம் விளங்கும். என்றாலும் வாசகர்களாகிய உங்களுக்கு ஒரு ஐயம்

ஏற்படலாம்; அதாவது "அடிபடு, அடிக்கப்படு" என்றெல்லாம் இன்றும் இருக்கும்பொழுது "செயப்பாட்டுவினை இறந்தது" என்பது எதனால்? எப்படி நியாயம்? என்று கேட்கலாம்.

நியாயமான கேள்வி, "அடிபடு, அடிக்கப்படு" என்ற சொற்கள் இறக்கவில்லை. இறந்து, புதைந்து, மண்ணில் மக்கி மறைந்துவிடவில்லை. அப்படி அழிந்திருக்குமானால் என்றால் இந்த ஆராய்ச்சியே நடத்தியிருக்க முடியாது. எனவே இவைகள் இருப்பவையே, பின் ஏன் இறந்தவை என்றேன்?

பொருட்காட்சி சாலையில் பாடம் செய்து வைக்கப்பட்டிருக்கும் எலும்புக்கூடு, தோல், ஆயுதம் முதலியவைகள் இன்று உயிர் உடையவை அல்ல; ஆனால் அவைகள் இல்லாதவை யல்ல, கற்பனை அல்ல; இருந்து இறந்தவை; எப்படி என்று எழுதத்தேவை இல்லை. அவைதான் கூடாக— பழங் குப்பையாக—இருக்கின்றனவே, எனவே இருந்தவை என்பதில் ஐயம் இல்லை. அதே பொருட்காட்சியில் இருக்கும் பழைய நாணயத்தை ஒரு மனிதர் உலோகத் தேவைக்காக வோவேடிக்கைப் பொழுது போக்குக்காகவோ காசுகொடுத்து வாங்கலாம்; அவரது செயல் தற்பொழுது ரூபாய் நாணயம் நோட்டுகளுக்குச் சில்லறை மாற்றல் ஆகும். புரியாவிட்டால் பழைய ஒரு அணவுக்கு புதிய ஆறுகாசு (பைசா) வாங்குவதையோ கொடுப்பதையோ கொள்ளுங்கள்; புரிந்துவிடும். இவ்விதம் பொருட்காட்சியில் கிடக்கும் பழையகாசை ஒருவர் வாங்கிவிட்டதால்" அக்காசு செலாவணி-புழக்கம் உடையது' ஆகிவிடாது; மேலும் பண்டைய பொருள்களையோ புதிய பொருள்களையோ பலபேரும் பலதடவை கையாளாமல் எப்பொழுதோ எங்கேயோ எவரோ ஒருசிலர் கையாண்டால் அப்பொருளைப்பற்றி எல்லோரும் அறிவார் என்று சொல்ல முடியாது. "அப்படி ஒன்று இருக்கிறது" என்றே தெரியாத பலரும் இருக்கலாம். இவ்வாக்கியம் புரியவில்லை என்றால் அமரிக்கா-ரஷ்யாவில் நாளுக்குநாள்—ஏன்? வினடிக்கு வினடி புதியபுதிய பொருள் உண்டாவதை உணராத கிராமத்தானை நினையுங்கள். இவ்வளவு ஏன்? "வினடிக்குவினடி புதிய பொருள் உண்டாகிறது." என்றளவு தெரிந்த எனக்கு" அவை எவை?' என்பது தெரியாது. எவைஎன்பதையே அறியாத எனக்கு அவை எப்படி இருக்கும்? எப்படி செய்யவேண்டும்? என்னபயன்? என்பதெல்லாம் தெரியுமா? தெரிய வழியுண்டா? இல்லையே! இப்படித்தான் அருகலாக— மிகக்குறைவாக வழங்கும் "அடிபடு" முதலியவற்றை ஆராய்ச்சியாளர்கள் கவனிக்கவில்லை. அவர்கள் கவனம் படவில்லை.

கவனம் இல்லாத காரணத்தால் ஏற்பட்ட இலக்கணப் பிழைகள் ஏராளம். மக்களை அணுகாத காரணத்தால் விளைந்த குறைகள் மிகுதி. எங்கோ ஒருமூலையில் வழங்குவதால் புதையுண்டதுபோல போனவை எவ்வளவோ? இவைகளுக்கு உதாரணம்தந்து விளக்கத் தேவை இல்லை எனினும் உதாரணம் தருகிறேன். ஒன்பது (Nine9) என்பதற்குத் தொல்காப்பியருக்கு முந்திவழங்கியபெயர் 'தொண்டு' என்பது, இத்தொண்டு தொல்காப்பியர் காலத்தில் மிகமிக அருகலாகவழங்கியதால் அவரது கவனத்தைக் கவரவில்லை. 'தொண்டு' மீது தொல்காப்பியர் கவனம்படவில்லை; இதனாலேயே "ஒன்பான் ஒகரமிசை தகரம்ஒற்றும்" என்று தவறுகச்சூத்திரம் எழுதநேர்ந்தது.

காவிரிப்பூம்பட்டினச் செம்படவர் (மட்டும்) இன்றும் "தான் (He She It)" என்ற படர்க்கைப் பெயரைப் பேசுகின்றனர். இதைத்தொல்காப்பியர் காலமுதல் இன்று வரை எந்தப்புலவரும் கவனிக்கவே இல்லை. "கால்டுவெல், வேங்கடராஜுலுரெட்டியார், மு. வ. தேவநேயபாவாணன்" முதலிய ஆராய்ச்சியாளர்களும் அறியவில்லை. இதில் வியப்பில்லை. கால்டுவெல் முதலோரும் காவிரிப்பூம்பட்டினச் செம்படவரும் பேசவில்லை. எனவே இருப்பதை அறியவில்லை. பரிமாறிக்கொள்ளவில்லை.

மேலும் புலவர்கள் வேண்டுமென்றே பாமரர் பேச்சைக் கேட்பதுகிடையாது; கொச்சை என்று ஒதுக்கத்தயங்குவது கிடையாது. இதனால் ஏற்பட்ட பிழைகள் ஏராளம். எடுத்துக் காட்டாக 'நானும்நீனும்' என்ற தொடரையோ "நீனு" என்ற முன்னிலைப்பெயரையோ தொல்காப்பியர் ஏற்றிருப்பாரே ஆனால்—அந்தப்புலவர் கொச்சை என்று ஒதுக்கிய பண்டிதரைவிட்டு ஒதுங்கியிருப்பாரே ஆனால்—"நீ என் ஒரு பெயர் நெடுமுதல் குறுகும்ஆவயின் னகரம் ஒற்று ஆகும்மே" என்று அருத்தமில்லாத சொற்றிறம் (சூத்திரம்) செய்திருக்க மாட்டார்.

இவைகளைப்போலவே செயப்பாட்டுவினை ஒதுக்கப் பட்டும் ஓங்கியும் கிடக்கிறது. மேலும் இவ்வடிவம் தேவை இல்லை, மாங்காய் விழுந்தது; மாங்காய் விழுந்திருக்கிறது, மாங்காய் விழுபட்டது; விழப்பட்டது என்று எப்படிச் சொன்னாலும் பொருள் என்னவோ ஒன்றுதான். அப்படியிருக்கும்பொழுது சுலபமாக 'விழு' என்று சொல்வதை விட்டுவிட்டு வெட்டியாக 'விழுந்திரு, விழுபடு, விழப்படு, விழப்பெறு, விழுவுண், விழுந்தாகு, விழுந்துபோ" என்றெல்லாம் ஏன்பேசவேண்டும்? இதனால்தான் விழுந்திரு முதலாக உள்ள செயப்பாட்டுவினை வடிவங்களை மக்கள்

பேசவில்லை; 'பேசவில்லை' என்றால் 'அறவே' என்று அருத்தமல்ல, 'அடிக்கடி' என்பதே கருத்து. மேல்உள்ள வாய்பாடெல்லாம் செயப்பாடே என்பதைப் பின்பு காணலாம்.

செயப்பாட்டை மக்கள் கைவிட்டார்கள். பண்டிதர்கள் கெடுத்தார்கள். எப்படிஎன்று அடுத்துக்காணலாம். இந்த இருவித நிலையால்தான் ஆராய்ச்சியாளர்கள் "செயப்பாட்டு வினை கிடையாது" என்றார்கள். அவர்கள் மீதுகுற்றம்இல்லை, குறையுண்டு, காணலாம் அதை.

## "இல்லை" என்ற காரணம்

மதிப்புக்குரிய ஏசுவைப்பற்றி பைபில் கதைகள் பலவாறு கூறுவதோடு அவர் பலப்பல அற்புதங்கள் (Miracles) செய்தார் என்றும் செத்த மூன்றாம் நாள் தோன்றினர் என்றும் கயறு அளக்கிறது (பொய்கூறுகிறது) மேலும் பிறந்த நாளைப் பல என்று பலநூல் கூறுகிறது. இவைகளையெல்லாம் திரட்டிய ஒரு ஜர்மன் ஆராய்ச்சியாளர்" ஏசு என்று எவரும் பிறக்கவே இல்லை—கதையளப்பு" என்றார். இப்படிக் கூறிய ஆய்வாளர் மீது குறைகூற வழியில்லை. இதையே கால்டுவெல்லுக்கு ஏற்றுகிறேன். நிற்க;

செயப்பாட்டில் என்ன கதையனந்தனர் என்பதுபின்னால் வரும் நமது நடிகர் திலகம் சிவாஜிகணேசனை ஒரு செய்திப் படப்பத்திரிக்கை "தென்னகத்து ஒரே நடிகர்" என் கலாம், தவறொன்றும் இல்லை. இவ்வரியை கி. பி. 2000 ல் தவறாக அருத்தம் கொண்டோ, சிவாஜி மீது பற்று கொண்டோ ஒருவர் "நடிகர்" என்று வருமிட மெல்லாம் 'சிவாஜி—சிவாஜி' என்பதாகக் கொள்வோம். அதாவது அவருக்கு நடிகர் வாய்பாடு "சிவாஜி" ஆகும். இந்த வாய்பாடுவரை முறையற்று வளர்ந்துவிட கி. பி. 2500ல் வரும் ஒரு ஆராய்ச்சியாளன் "கி. பி. 1960 ல் சென்னையில் மட்டும் 10 ஸ்டுடியோக்கள் இருந்த தடம் தெரிகிறது; அப்படியிருக்க தென்னகத்துக்கு ஒரே—ஒரேவொரு—சிவாஜி இருக்க முடியாது. சிவாஜி என்று ஒரு நடிகரே கிடையாது; மொகலாய ஔரங்கசீப்பிடம் மராட்டிய சிவாஜி நல்ல நாடகம் நடத்தினன். இதனால் சிவாஜி என்ற அவன்பெயர் 'நடிகர் சிறப்புப் பெயர், ஆகிவிட்டது. இவ்விதம் ஆவது உலக இயல்பு. ஈடிப்பஸ், ஹெர்குலிஸ் முதலிய ஆண்களின் பெயர் அவர்களின் தன்மை யானது; வீமன் 'என்று இன்றும் பலசாலியைப் பாமரர் கூறுவர்; நீகிருஷ்ணன்' டா இந்திரஜித், எமன் என்றெல்லாம் பேசுவதைக் கேட்கலாம். இதே முறையில் தான் "மராட்டிய சிவாஜி! என்றவன் பெயர் நடிகன் பெயரானது. உண்மையில் சிவாஜி என்றொரு நடிகன் இருந்தால்

கி. பி. 2000 ல் 80 க்கும் மேலாகக் கிழவயது ஆகியிருக்கும். அன்றைக்கு நடிக்க முடியுமா? நடித்ததாக மிஸ்டர் X (நமது முதலாவது கற்பனை ஆசிரியர்) குறிக்க முடியுமா? எனவே சிவாஜி என்று எவரும் நடிகர் 1960 ல் கிடையாது" என்று தெரிவிக்கலாம். இதேகதி நமது செயப்பாட்டுக்கும் வந்தது எப்படி?

'செயப்பாட்டுவினை' என்ற செயப்படு பொருள் வினையில் செயல் பெரும்பாலும் பொருளில்பட்டது, இதனால்தான் 'செயல்படுபொருள்' என்ற பெயரே வந்தது என்றோம். மேலும் 'படுவினை' என்றொரு பெயரும் ஏற்பட்டது என்றோம். இப்படி சொல்வதால் எல்லாச் செயலும் படும். பட்டது' என்பது பொருள் அல்ல, இதை உணராத புலவர்கள் கி.பி. 2000 ல் நடிகருக்கு சிவாஜி என்று வாய்பாடு கொண்டது போல செயப்பாட்டுவினைக்கு 'படு'வை மட்டும் உருபு—துணை வினை என்று கொண்டனர்.

இப்படி செயப்பாட்டுவினை 'படு' என்று கொண்டபிறகு 'செயப்பாட்டுவினை வாக்கியம் வரும் இடமெல்லாம் "படு... படு...படு...படு..." என்று எழுதினர். பேசத்தான் வாய் வராதே. செய்யுளில் ஒருவரி (Line) என்றளவு காலடி—மூச்சு—பேச்சு என்றகணக்கில் ஏற்பட்டது; இதனால் 7, 8, சொற்கள்தான் ஒருவரியில் வரும்: பேச்சையே தொழிலாகக் கொண்டவனுக்கு 10, 12, வரலாம். என்னதான் முண்டி முண்டி போனாலும் 16, 17, க்குமேல் வராது. இப்படியிருக்க சில வெட்டிப்புலவர்கள் ஒரு அடிக்கு 120 சொற்கள் (சீர்கள்) எழுதியுள்ளனர். இப்படி பேசமுடியுமா? 120 சொல் என்ன பிரமாதம், 120 பககம் எழுதிவிட்டு "இது ஒரு அடி, என்றால் தாள் தள்ளியாவிடும்? இதேகதையில்" அழைக்கப்படுகிறீர் கள், எச்சரிக்கை செய்யப்பட்டுக் கொண்டிருந்தார்களா?... என்றெல்லாம் இரண்டரை முழம் நீட்டி எழுதினர்கள். ஆராய்ச்சியாளர்கள் தள்ளுபடி செய்தார்கள்.

அவர்கள் தள்ளுபடி செய்த காரணங்களையும் அதுதவறு என்ற நம் காரணங்களையும் காண்போம்.

## (1) மொழிபெயர்ப்பு நடை (Translated sentence)

ஆதிமக்களும் இன்றைய கிராமவாசிகளும் உட்காருவதற்காகச் சிறு பலகை—தடுக்கு—பாய் வைத்துள்ளது நமக்குத் தெரியும். உட்காராத பொழுது மூலையில் கிடக்கும். இதனால் "எடுத்துக்கொள், என்று அவசியப்பட்ட பொழுது பெரியவர் (மற்றவர்) சொல்ல நேர்ந்தது; இன்றும் கேட்கலாம். இவ் வழக்கத்தால் "ஆசனத்தை எடுத்துக்கொள்ளல்" என்ற பேச்சு வாக்கியம் ஏற்பட்டது. இதையே எடுத்துக்கொள்,

எடுத்துக்கொண்டேன், எடுப்பான்...என்றெல்லாம் பாலினைக்குக் கொள்க. இவ்வழக்கம் விசுப்பலகைக்கு (பெஞ்சக்கு) பொருந்தாது—ஆனாலும் 'உட்காரும் இடம்' என்ற ஒப்புமையில் அதற்கும் சொல்லலாம்.

அதாவது "Taking seat" என்ற முறை நியாயமே; Take-seat என்பது ஆங்கிலச் சொற்றொடர் எனினும் பண்டைய தமிழ் மரபே. இதைத் தமிழர் கைவிட்டனர். ஆங்கிலேயர் விடவில்லை. அந்த ஆங்கிலேயர் வெட்டித்தனமாக Take bath—Take oilbath என்று வளர்த்தனர். இந்த Takeoilbath தமிழ்நாட்டார் வழக்கு அல்ல. தற்போது ஆங்கிலம்படித்த பலரும் "நான் எண்ணெய் முழுக்கு எடுத்தேன்" என்று கலப்புத் தமிழிலே பேசுவதைக் கேட்கலாம்.

எவனுவது கிராமத்தானிடம் "எண்ணெய் குளியல் (முழுக்கு) எடுத்தேன்" என்றால் அவன் திகைப்பான்; "எண்ணெய்", "குளியல்" "எடுத்தேன்" என்று சொல்லுகின்ற சொல்லெல்லாம் தமிழாக இருந்தாலும் அந்தத் தமிழனுக்கு இந்தத் தமிழ்த் தொடர் புரியாது. 'குளியலை எடுத்தாரா? எப்படி' என்பான். இதுதான் தாய்மரபு அல்ல என்று அறிய உதவும் கருவி-வழி. இவ்வழியைத்தான் செயப்பாட்டு வினைக்கு ஆராய்ச்சியாளர் கொண்டனர். அவாவது...அதாவது என்ன? கீழ்வரும் வாக்கியத்தைக் கிராம வாசியிடம் சொல்லிப்பாருங்கள்—தம்பி, நீ கூட்டத்தில் பங்கு கொள்ளுமாறு அழைக்கப்படுகிறாய்; பாப்பா, நீ கொடுத்த தண்ணீர் என்னால் குடிக்கப்படும், பாட்டி, இன்றைக்கு சினிமா உன்னால் பார்க்கப்படும்...சொல்லிப்பாருங்கள். அவர்கள் ஓடினால் விட்டுவிடுங்கள், பாவம்.

இம்மறுப்புக்கு மறுப்பு:

இம்மாதிரி பேசுவது தமிழ்ப்படிப்பாளி மட்டுல்ல. ஐரோப்பியரும் உண்டு அதாவது ஆங்கிலேயப் படிப்பாளியின் பேச்சு—வெட்டி நீட்டிமுழுக்குதல்—ஆங்கிலேயப் பாமரனுக்குத் தெரியாது; புரியாது. இதை ஜெஸ்பர்ஸன் தனது மொழி நூலில் விளக்கியுள்ளார். இந்த ஜெஸ்பர்ஸன் கருத்தை மு. வ. கையாண்டும் 'தமிழ் குறையுடையது' என்பது வியப்பாக உள்ளது.

(2) மாங்காய் விழுந்தது' என்றெல்லாம் செய்வினையே செயப்பாட்டுவினையின் பொருள் தருவதால் தனியே செயப்பாட்டுவினை என்றொருவினை தேவை இல்லை —இதுதான் மு. வ. வின் மறுப்புக்கு ஆதாரம்.

நம்மறுப்பு: மு. வ. வின் வாக்கியம் தெளிவாக இல்லை. ஒருவேளை "தேவை இல்லை என்பதால் ஏற்படவில்லை"

என்று கருதுகிறார் போலும். இதொடு வாக்கிய வகை: "கேள்வி—பதில்" பகுதிக்கு "எனக்குத் தலைவலி" என்று கடிதம் வந்தால் "மருந்து என்ன?" என்ற வினா மறைந்துள்ளது என்பது நாமறிவோம். இம்முறையில் தான் மு. வ. எழுதியுள்ளார், வேறொன்றும் இல்லை.

(1) "செயப்பாட்டு வினை" யின் பொருளைத் தருவதால்" —என்று சொல்லும் பொழுது அப்படியொரு வினை இருப்பது வெளியாகிறது; இல்லையா?

"தேவையில்லை" என்பதை நாமே முன்பே சொல்லி விட்டோம்.

(2) மாங்காய் விழுந்தது" என்ற தொடரில் உள்ள 'விழுந்தது' என்ற சொல்லை "செய்வினை" என்று எவ்விதம் கொண்டார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. இது செய் வினையல்ல; செயப்பாட்டுவினையே! எப்படி? அது செய்த வனுக்கு வினையாக இல்லாமல் செயப்படு பொருளுக்கு வினையாக இருப்பதால் செய்தவன் வினை அல்ல. செயப்படு பொருள் வினை ஆகும். அதாவது செயப்பாட்டு வினையாகும்.

இதை நம்ப முடியவில்லையா? 'ராமன்' என்ற ஒரேசொல் பலமக்களின் பெயராக இருப்பது போலவும் 'அரி... வண்டு...' முதலிய பல சொற்கள் பல பொருள்களைத் தருவது போல வும் "விழுந்தது" என்ற ஒரே சொல் இருவகை வினையாகும். ஆனாலும் இருவகைச் சொல்லும் பேச்சில் மாறுபாடும். 'அவன் வந்தான்' என்பதையே 'அவன்வந்தான் (He camy) என்று மட்டும் சொல்லாமல் வந்தானோ? வந்துபயன் என்ன? வரவில்லை! என்றெல்லாம் பொருள்பட குரல் மாறுபட ஒலிப் போம். எழுத்தில் எல்லாமே ஒன்றாகத்தான் இருக்கும்.

இக்காரணம் போலிச் சமாதானம் என்றால் These manges taste soru, The cakes cat short and crip என்பன போன்ற ஆங்கில வாக்கியத்திலும் taste, eat என்ற செய் வினையே செயப்பாட்டு வினையாக வந்ததாக எண்ண முடி யாது. ஆனால் ஆங்கில இலக்கணம் செயப்பாட்டுவினை என்கிறது. இதை ஏன் கால்டுவெல் காணவில்லை? மு. வ. மறுக்கவில்லை! தள்ளினால் இரண்டு மொழியையும் தள்ளுக.

(3) தமிழ் வழக்கில் செயப்படு பொருளையே செய்தது போல சொல்லும் வழக்கம் உண்டு என்கிறார் தொல்காப்பியர் அதாவது "செயப்படு பொருளைச் செய்தது போலத் தொழிற் பட கிளத்தலும் வழக்கியல் மரபே" என்கிறார்.

இதனால் மாங்காய் விழுந்தது 'என்றார்களே தவிர விழுபட்டது, விழப்பட்டது என்று சொல்லவில்லை. எனவே சொல் ஏற்படவில்லை. மறுப்பு:

தொல்காப்பியர் "கிளத்தலும் உண்டு" என்றாரே தவிர அப்படித்தான் சொல்ல வேண்டும், சொல்லுகிறார்கள் என்று வரையறுக்க வில்லை. மேலும் "வழக்கியல் மரபு" என்று ஒதுக்கி—ஒப்புக்கொள்ளாத முறையில் சூத்திரம் செய்திருப்பதைக் கவனிக்க வேண்டும். இதை மொழி வரலாறுமேதை மு. வ. ஏன் கவனிக்கவில்லை?

புலவர் ஒதுக்கிய வரலாறு முன்பே குறித்துள்ளேன். இச் சூத்திரப்படியே ,'செய்வினை" என்பது "மக்கள் வழக்கு" —வேறுவகை புலவர் வழக்கியல் என்பது புலப்படும். அது தான் செயப்பாட்டுவினை ஆகவேண்டும். வேறுவகைவினை ஆக முடியாது.

(4) உடைந்தாயிற்று, போயிற்று. என்றெல்லாம் முற்றுவினையை இணைத்து செயப்பாட்டு வினையைக் கொள்ளுகிறோம்.

மறுப்பு: இது புலப்பட வில்லை. ஒருவேளை இரு சொல் ஆதாவது ஒருசொல் என்று ஒப்புக்கொள்ள மறுக்கிறார் போலும்.

(1) முற்றுவினையைச் சேர்க்கிறோமா? முற்றாவினையைப் பிரிக்கிறோமா? என்பது பிரச்சனையல்ல; உண்டா? இல்லையா?

(2, செயப்பாட்டுவினைச்சொல்லை ஒருசொல் என்று எவர், சொன்னார்? இருசொல் என்பதுதான் தீர்ந்துபோன செய்தியாயிற்றே.

(4) தமிழில் மட்டுமா முற்றுவினையை இணைக்கிறோம்? இருசொல்லாக இருக்கிறது? Is, are, was, were முதலிய முற்றுவினைகள் இணையாமலா ஆங்கிலம் உள்ளது? உடைந்து போச்சு' என்று தமிழன் கிட்டத்தட்ட ஒருசொல்லாகவே ஒலிக்கிறான்; ஆனால் Was killed, havebeen killed, will havebeen killed என்பன தெளிவாகப் பல சொல். இல்லையா?

(5) செயப்படு 'என்பது எச்சமும் வினையும் கலந்த இரு சொல், செய்ய+படு'—ஆகுமேதவிர ஒருசொல் அல்ல.

மறுப்பு: ஒருசொல் உள்ளதா? இருசொல்லா இருக்கலாமா என்பது நம் ஆராய்ச்சியில்லை. நிற்க; தமிழைக் குறை கூறி ஆங்கிலத்தைப் போற்றும் இவர்கள்கண்ணில் ஆங்கிலம்

படவில்லையா? கவனம் இல்லையா? Was loved, என்பதில் loved எச்சமே, தொடர் இருசொல்லே.

(5) வினையால் அணையும் பெயரெச்சம் செயப்பாட்டு வினைவடிவம் பெறவில்லை மறுப்பு: இதைத்தவிர்த்த ஏனைய வினைவகை செயப்படாக வருவதை இதுவேகாட்டுகிறது.

இதில் வியப்பு என்ன தெரியுமா? இதே வினையாரணையும் பெயரெச்சம் ஆங்கிலத்திலும் செயப்பாட்டுவினை வடிவம்பெற வில்லை. உதாரணமாக கொடுத்த வீடு 'என்று வருமேதவிர கொடுக்கப்பட்ட வீடு என வராது ஆங்கிலத்திலும் Given வீடு என்றுவருமே தவிர Been given வீடு எனவராது.

கொடுக்கப்பட்ட வீடு, சொல்லப்பட்ட கருத்து என்றெல் லாம் பண்டிதர்கள் எழுதியுள்ளார்கள் என்பதை மறக்கக் கூடாது.

(6) பேச்சில் அதிகம் இல்லை.

மறுப்பு: இதுதான் உண்மை, வரலாறு சொல்லியிருக் கிறேன், போகட்டும், I am loved by sundari, leela had been loevd by me, water shall have bean taken by mother என்று தான் ஆங்கிலமக்கள் பேசுகிருர்களா? இல்லையே.

ஆக, செயப்பாட்டு வினை இல்லை "என்றகருத்து தமிழுக் குப் பொருந்திஞல் ஆங்கிலத்துக்கும் பொருந்தும். இரு மொழியிலும் குறைகள் உள்ளன. அதிலும் "கொன்றிருந் தான் (Was killed)" என்ற ஆங்கில முறையைவிட "கொல்லப் பட்டான்" என்ற தமிழ் சிறப்புடையது—எப்படியா? "ராவணன் ராமனுல் கொன்றிருந்தான்"—என்பதைக் கவனிக்க மேலும் Is, was, are, were என்று துணைவினைகள் நிறைவுத்தன்மை (Perfect) வாடை வீசுகிறது. ஆனுல் 'படு' என்பது செயப்பாட்டுத்தன்மையே மிகுதியாக உடையது. இதை நன்கு கவனிக்க.

இதுகாறும் கூறியதால்—செயப்பாட்டுவினையின் பிறப்பு, வளர்ப்பு, இறப்பு. இருப்பு புலப்படும்.

சென்ற இதழ் தொடர்ச்சி :

# களவியல் உரைநலம்

## (இரண்டாம் நூற்பா உரை)

(திருவாட்டி மேனகை அம்மையார், இராணிப்பேட்டை)

"திருவளர் தாமரை" என்ற செய்யுட்கண்ணே ஐந்திணை ஒழுக்கமும் நவிலும் கருத்துப்பற்றித் தலைவியை ஐந்திணை நிலத்தின் கருப்பொருள்களாலாயதோர் மாலையென வாதவூரடிகள் நுவலுந் திறன் யாவற்றினும் ஏற்ற முடைத்தாதல் ஓர்ந்துணர்க.

இவ்வாறு உவமித்தல் உவகைமிகுதியான் ஆகலான் உவகையே மெய்ப்பாடாயிற்று. "பூங்கொடி கண்டேகளித்த எம்கண்ணிணையே" எனத்தலைவன்எய்திய களிப்பை இச்செய்யுள் எடுத்தோதல் காண்க. கொடிபோல்வாளொரு நங்கைநின்றாள். நின்ற அவள் செவ்வியினைக்கண்ட தலைவன்றன் உள்ளம் அவள்பால் ஈர்ப்புற்றுங் கலந்துறவாட அவளேதானாய், தானேஅவளாய்ப் பிரித்தறியாவண்ணம் அவளது எழில்நலத்தாழ்ந்தான். ஆழ்ந்தானுக்குப் புத்துணர்வும் புத்தின்பமும் கிளர்ச்சியும் மகிழ்ச்சியும் மீதூர இன்பமெய்துகின்றான் ஆகலின் மெய்ப்பாடு உவகையா மென்க. திருக்கோவையா ருரைக்கண்ணும் இவ்வண்ணமே உரைத்தார் பேராசிரியர் எனஅறிக. தஞ்சைவாணன்கோவை உரையாசிரியர் அதனை மறுத்து மெய்ப்பாடுமருட்கை யென்றுரைத்தாராலோவெனின் கூறுதும். தலைவன் ஒன்றை யொன்றாகப்புகழ்ந்து கூறல் வியப்பும் இன்பமும் மிக்கதாலேயே அல்லாது அவன்நெஞ்சில் மயக்கம் தோன்றியன்று. அன்றிக் கொடியென்றே மயங்கினனெனப் புகின் அக்கொடிதான் ஓர்காரிகையெனக் கருத்துவிளக்கம் பெற்றதுறையாக ஆன்றோர் ஒருபாடலும் கூறிற்றிலர். அன்றியும் சொக்கப்பநாவலர் ஐயம் என்றதுறைக்கண்ணே "கண்ணுற்ற தலைமகள் கொடியல்லள் பெண்ணென்பதறிந்து' எனத்தாமே வலிந்து உரை கூறுதலானும் அஃது உரையன்மையறிக.

### ௯. ஐயம்.

"ஐயம்என்பது—கண்ணுற்றபின்னை ஐயப்படுவது. எங்ஙனமோஎனின் வரையரமகள் கொல்லோ, வானரமகள் கொல்லோ, நீரரமகள் கொல்லோ இத்துணை பேதகவுடை யாள், அன்றிமக்களுள்ளாள் கொல்லோ என்றும் ஐயப்படுவது. அதற்குச்செய்யுள்.

"உரையுறை தீந்தமிழ் வேந்தன் உசிதன்தன் நாட்டொளிசேர்
விரையுறை பூம்பொழின் மேலுறை தெய்வங்கொ
லன்றிவிண்ணோர்
வரையுறை தெய்வங்கொல் வானுறை தெய்வங்கொல்
நீர்மணந்த
திரையுறை தெய்வங்கொ லையம் தருமித் திருநுதலே."

"இவளும் அவனை ஐயப்படும். கடம்பமர், கடவுள் கொல்லோ, இயக்கன்கொல்லோ அன்றிமக்களுள்ளான் கொல்லொ என்று இங்ஙனம் ஐயப்படும்".

என்று ஐயத்தின்திறத்தை விளக்குவார். இப்பாவிற்குப், "புகழ்விரும்பி வசிக்கின்ற இனியதமிழ்நாட்டு வேந்தனாகிய உசிதன் தன்னுடைய நாட்டிலுளதாய ஒளிசேர்ந்து மணம் விரவும் மலர்கள் நிறைந்த பொழிற்கண்ணே உறையும் தெய்வமகளோ நீராளிரம்பிய திரையுடைய கடலின்கண் வாழ்வுதரும் தெய்வமகளோஎன்று ஐயத்தைத் தருவாளாய் நின்றாள், அழகு பொருந்திய நுதலினையுடைய இவ்வணங்கு என்பது" பொழிப்புத் திரட்டலாகும்.

தலைமகள் பொழிலைச் சார்ந்துநிற்கும் பெற்றிநோக்கிச் "சூரமகளோ" என்று வியந்தான். மலையைச்சார்ந்து நிற்றலால் "வரையுறை தெய்வங்கொல்" என்றான். பொதியில் புலவர்க்குறையு ளானதன்மையும் கருதினான் "வானுறை தெய்வங்கொல்" என்றான். இதன்மெய்ப்பாடு உவகையைச் சார்ந்த மருட்கை. தெய்வப்புலமைத் திருவள்ளுவனார்கூறிய

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கணங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு"

என்றகுறளின் சிறப்பமைதியும் ஈண்டு உன்னிமகிழற் பாலது. ஈண்டு தலைவன் ஐயத்துக்கண் மயிலோஎன உவமித்த தன்மை, யாம்காட்சிக்கு மெய்ப்பாடே உவகை, மருட்கை யன்று என்பதை மெய்ப்பித்தல்ஓர்க. நக்கீரர் தலைமகளும் ஐயப்படும் என்றார். ஆனால் நச்சினார்க்கினியரும் சொக்கப்ப நாவலரும் "தலைவிக்கு ஐயம்நிகழின் அச்சமேயன்றிக் காமக் குறிப்பு நிகழாதாம்" எனவே ஐயம் உரித்தன்று என்றார்கள் இக்கட்டுரை ஏற்புடைத்தன்று. என்னை? எழிலேதிரண்ட இயல்பிற்றாய் ஓர்பொருள் கண்முன்தோற்றம் பெற்றது எனின் எப்பாலாராயினும் அஃதுயாதோஎன வியவாதிரார்கள். அன்றியும் ஊழ்வினையுருத்துவந்து கூட்டலான் அன்றோ தலைமகனும் தலைமகளும் கூட்டம்பெற்றனர். ஆயின் தலைவனது எழல்மிகு தோற்றம்கண்ட தலைவியின்உள்ளம் அவன்பால் ஈர்க்கப்படாமலும் அவன்உருவமைப்பினை வியவாமலும் இருத்தலொண்ணுமோ? இருப்பின் அவன்பா

லவட்குவேட்கை விளையுமாறு யாங்ஙனம்? தொல் காப்பியத்துள்,

"சிறந்துழி ஐயம் சிறந்த தென்ப
இழிந்துழி யிழிபே சுட்ட லான"

எனவரும் நூற்பாவான், காதலுணர்வு யார்மாட்டும் தோற்ற முறும் இயற்கைத்து; தலைமக்கள் பொருவிறந்தாராயின், ஐயமும் பொருவிறந்த பொருள்கள் மேலாகும். அவர்கள் இழிந்தாராயின் அவர்கள் தங்கள்தங்கள் இழிபையே சுட்டிக் கொள்வார்கள். என்பது பெறப்படும் இவ்வாறு இழிமக்கள் பால் தோன்றும் காதலுரையாட்டினைக் கலித்தொகை நகைச் சுவையோடுங் கூறிச்செல்லா நின்றது. இதற்கு இங்ஙனம் பொருள் காணமாட்டாராய் நச்சினார்க்கினியர்.

"அங்ஙனம் எதிர்ப்பாட்டின் இருவருள்ளும் சிறந்த தலைவன்கண்ணே ஐயம்நிகழ்தல் சிறந்ததென்று கூறுவார் ஆசிரியர். அத்தலைவனின் இழிந்த தலைவிக்கண் ஐயம் நிகழுமாயின் இன்பத்திற்கு இழிவே அவள் கருதும் ஆதலான்." என்றுரைத்துப் போந்தார்.

அவரைப் பின்பற்றியே சொக்கப்ப நாவலரும் பகர்ந்த மையின் அதனைக் கொள்ளக் கடவேமல்லேம். என்னை? தெய்வப்புலவர் சேக்கிழார், ஆளுடையநம்பி விற்புரை நுதலின் வேற்கண்விளங்கிழை பரவையாரைவியந்து கூறியதாக ஐயத்துறைககண் அமைத்தபாடலில்

"கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேனென் றதிசயித்தார்.

ஈங்கு வந்துள்ள திருவாக்குச் 'சிறந்துழி' ஐயம் சிறத்தலைக் காட்டல்காண்க. இதனானும் காட்சித்துறைக்கு உவகையே மெய்ப்பாடாதல் பெறப்பட்டது. அருளினும் திருவினும் சிறந்த ஆளுடையநம்பி அருளினும் திருவினும் சிறந்தபரவையார் ஆயஇருவரும் பொருவிறந் தாராயினமையின் ஆண்டுசுட்டப்பட்ட பொருள்களும் மிகச் சிறந்தவாயின. இனிசுந்தரரைக்கண்ட பரவையாரும்.

"முன்னேவந் தெதிர்தோன்று முருகனோ பெருகொளியால்
தன்னேரில் மாரனோ தார்மார்பின் விஞ்சையனோ
மின்னேர்செஞ் சடையண்ணல் மெய்யருள்பெற் றுடையவனோ
என்னேயென் மனந்திரிந்த திவன்யாரோ என நினைந்தார்

எனஐயம் நிகழ்த்தினமையும் காண்க. இவ்வண்ணமே சிந்தாமணியிலும் பதுமையாரிலம்பகம் 146ஆம் பாடலிலும் கிழத்தி ஐயம் நிகழ்த்தினமை பெறலாகும். இவ்வண்ணம் சான்றோர் செய்யுட்களிருப்பவும் ஐயம் நிகழாதென்றால் மாறுபடுமுறையாகும். ஆயின் கோவைச் செய்யுட்களில் தலைவியின் ஐயப்பாடோதிற்றிலரேயெனின் நன்று கடாயினாய். தலைமகள் அச்சத்தாலும் நாணத்தாலும் விழுங்கப் பட்டாளாகலின் அவட்குக்கூற்று எழாதென்க. மற்று தலைமகனே தன்ஆராமையினால் தலைவிகேட்டு அவள் கருத்தறியவும் தன் உள்ள வேட்கை தணிவுபெறவுங் கூறுவானென்க. தலைவிக்குக்கூற்றாக நிகழாது உள்ளத்தே ஐயம் நிகழுமாகலின் கோவை ஆசிரியன்மார் செய்யுள் செய்திலர், பெரியபுராணத்தும் "என நினைந்தார்" என்று நினைப்பையே கிளத்தியதறிக. இப்பெரிய புராணச் செய்யுட்கள் பொருளாழம் உடையவனாய் ஓசைநயம் செறிந்தனவாய் ஓதுவார் சிந்தைக்கும் செவிக்கும் இன்பம் ஊட்டுவாயிருத்தலின் அவையிரண்டும் ஈண்டு தந்துரைக்கப் பட்டன. அவற்றிற்குப்பொருள் விரித்துக்கொள்க.

எனவே தலைமகள் ஐயப்பாடுகுறித்து ஆசிரியர் நக்கீரர் உரையே மெய்ம்மை சான்றது என அறிந்தாம்

ம. தெளிவு.

"இவ்வகை நினைந்த பின்னைத் தெளிவுவருமாறு : ஆடை மாசுண்டாலுனும், கால்நிலம் தோய்தலானும், கண் இமைத்த லானும். கண்ணிவாடுதலானும், சாந்து புலர்தலானும் என்று இங்ஙனம் தெரியும். தெரிந்த பின்னைத்துணியும் என்பது அதற்குச் செய்யுள் :

பாவடி யானைப் பராங்குசன் பாழிப் பகைதணிந்த
தூவடி வேன்மன்னன் கன்னித் துறைச்சுரும் பார்குவளைப்
பூவடி வாணெடுங் கண்ணு மிமைத்தன பூமிதன்னிற்
சேவடி தோய்வகண் டேன்தெய்வ மல்லளிச் சேயிழையே."

"இவளும் அவனை யிவ்வாறே தெரிந்து மக்களுள்ளான் என்பதும் துணிபு. துணிந்த பின்னே யிருவர்க்கும் வேட்கை மிகத் தம்மில் கூடுவது. இவ்வாறு புணரப் பெரிதும் வனப் புடைத்தாய்க் காட்டும் என்பது,

"இவ்வுரை பொருந்தாது. என்னை காரணமெனின், இது கைக்கிளையிலக்கணம். தெய்வங்கொல்லோஎன ஐயமுற்ற நிலையும் தெய்வ இலக்கணம் தீண்டாவாகலின் ஐயம் தெளிந்து மகடூஉவாதல் துவரஉணர்ந்த அத்துணிவு நிலைமையும் எனக் கைக்கிளை யிலக்கணமாகச் சொல்லப் பட்டமையின் ஈண்டு அகத்திணையுள் அஃது உரைப்பது திணைமயக்கம்; ஆகலின் மேலதே பொருள்"

"காமப்புணர்ச்சி என்றமையின் காமத்தின்வேறு புணர்ச்சியாகல் வேண்டும்பிற, 'வாளாற் கொண்டகொடி' என்றது போல எனின் அற்றன்று. 'பொன்னாற் செய்த மஞ்சிகை.' 'மண்ணாற் செய்தகுடம்' என்பது போல வேறன்றி நிற்புழிக் கொள்க என்பது.

"இஃது இயற்கைப்புணர்ச்சி எனப்படும். புலவராற் கூறப்பட்ட இயல்பினாற் புணர்ந்தாராகலானும், கந்தருவ வழக்கத்தோடொத்த இயல்பினாற் புணர்ந்தாராகலானும் என்பது. இனித் தெய்வப்புணர்ச்சி எனவும்படும். இருவரும் தெய்வத்தன்மையாற் புணர்ந்தாராகலின் என்பது. அல்லதூஉம், முயற்சியும் உளப்பாடுமின்றி ஒருவற்கு ஒருகருமம் கைகூடினவிடத்துத் தெய்வத்தினான் ஆயிற்றுஎன்ப. அதுபோல இவர்க்கும் முயற்சியும் உளப்பாடும் இன்றிப் புணர்வு முடிந்தமையானும் தெய்வப்புணர்ச்சி எனப்பட்டது. இதுவே முன்னுறுபுணர்ச்சி எனவும்படும். இவள் நலம் இவனானே முன்லுற எய்தப்பட்டமையானும் இவன் நலம் இவளானே முன்னுற எய்தப்பட்டமையானும் என்பது.

"இனித், தெய்வப்புணர்ச்சி, முன்னுறுபுணர்ச்சி. இயற்கைப்புணர்ச்சி என்பனவற்றுள் ஒன்று சொல்லாது காமப்புணர்ச்சியென்றே கூறியகாரணம் என்னையெனின், இவற்றுள் ஒன்றே சொல்லினும் ஒக்கும். அல்லது அவை யெல்லாம் அன்பினானே நிகழுமாகலின் காமப்புணர்ச்சி என்றார் என்பது. பலகாரணத்தினாய பொருளை ஒரு காரணத்தினாற் சொல்லுவது சிறப்புடைமை நோக்கி என்னை? நிலனும் நீரும்காலமும் வித்தும் என இவற்றினது கூட்டத்தினாயமுளையை நெல்முளைஎன்ப. நெல்முளைக்கு நெல் சிறப்புடைக்காரணம். நிலனும் நீரும்முதலாகவுடையான பொதுக்காரணம், அவை பயற்றுமுளை முதலாவுடையன வற்றிற்குங் காரணமாகலான். அதுபோல ஈண்டும் தெய்வமும் இயற்கையும் முன்னுறவும் பொதுக்காரணம், காமம் சிறப்புக் காரணம். ஆதலான் காமப்புணர்ச்சி எனப்பட்டது".

எனத் தெளிவின் திறத்தையும் இயற்கைப்புணர்ச்சியின் இலக்கணத்தையும் கிளந்தனர்.

தெளிவுத்துறைக்கண் காட்டப்பட்ட செய்யுளின் பொழிப்புரையாமாறு:—

பரந்த அடியினுடைய யானைத்தானைக்குரிய பராங்குசனால் பாழிஎன்றதோர் ஊரின்கண்ணே பகைவரைத் தணிப்பித்த வடிக்கபபட்ட வேலையுடைய அரசனாகிய தென்றிநாட்டுக் கன்னித்துறையினிடத்தே சுரும்புகள் நிறைந்த குவளைப் பூவினையும் வடிக்கப்பட்ட வாளையுமொத்த நீண்ட இவளது

விழிகளும் இமைத்தலைச்செய்தன. இவளது செய்ய அடிகள் தாம் புவியின்மீது தோய்ந்து நிற்றலையுங்கண்டேன். இன்ன காரணங்களினால் செவ்விய ஆபரணங்களை அணிந்த இவ்வணங்கு தெய்வ மகளானமை தெளிந்தேன் என்பதாம்.

கன்னித்துறை என்றதொடர் 'குமரியம் பெருந்துறை அயிரை மாந்தி' என்ற புறநானூற்று அடியினை நினைப்பூட்டுவதாம். இப்பெண்ணாவாள் தெய்வமல்லளாதற்குக் காரணம் இனையனகுறியே வேறுபடுத்துவன. மற்றுயாதொன்றினானும் வேற்றுமை கண்டாமில்லையென்பதாம்.

இனி, காட்சி ஐயம் தெளிவு முதலியன கைக்கிளை யிலக்கணம். அஃது அகத்திணையில் வருதல் திணைமயக்காம். ஆகலின் இவ்வுரை பொருந்தாது என்ற உரை பொருந்தாது. என்னை? காட்சியின்றேல் கூட்டமின்று. காட்சியுண்டேல் ஐயம், தெளிவு முதலியன நிகழ்தல் முறைமையாம். அற்றன்று அவர் காட்சியளவையானே தம்உணர்வினரன்றி எதிர்ப்பட்டுப்புணர்வர் வேட்கை மிகவினாலெனின் அது பொருந்தாது. வேட்கை மிகினும் தலைவிபால் இசைவுகாணாது கூடுவனேயெனின் அவன் முழுமகனாம். அன்றியும் பெண்ணாவாள் அத்துணை எளிதில் ஒருப்படுவளன்று. அவட்கு நாணமும் அச்சமும் பெரிதாகலின் என்க. அன்றி உணர்வினரல்லது புணர்ந்தாராலெனின் அவர் துய்க்கும் இன்பமும் உணர்வின்றியேநிகழும். அதனால் பயனின்றென்க. ஆகலின் இச்சொற்பாடு ஒருதலைக் காமமாகிய கைக்கிளையின் பாற்படாதென்க. ஒருதலைக் காமமாவது ஒருபாலார்மாட்டு காமவேட்கை நிகழ்தலும் மறுபாலார்மாட்டு அவ்வேட்கை நிகழாமையாற் பயனின்று போதலுமாம். இஃது அத்தன்மைத் தாகாது இருபாலார் மாட்டும் வேட்கை எழுதலானும், அவ்வகை ஒத்த அன்பினர் கூடுங் கூட்டமாகலானும், காட்சி, ஐயம், தெளிவு மூதலியன இருபாலரிடத்தும் நிகழ்தலானும்; பெண்மை இயல்பானே தலைவிபால் கூற்று நிகழாமையானும், தலைவன்பால் நிகழும்கூற்றே கூறப்பட்டமையானேயே இஃது கைக்கிளையாகாது அகத்திணையிற்படும் ஒழுக்கமாகும் என்பது.

"சிறந்துழி ஐயம் சிறந்த தென்ப
இழிந்துழி இழிபே சுட்ட லான" எனவும்
"வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்
றன்னவை பிறவு மாங்கவ ணிகழ
நின்றவை களையும் கருவி யென்ப,"

(தொடரும்)

# அழுகைச் சுவை

(வித்துவான் ந. செகதீசன்)

எண்ணில் உலகினில் மானிடர் யாவரும்
எய்தும் துயரினைத் தேர்ந்திடலாம்!
இன்று மனிதரின் நெஞ்சம் அழுகையை
எய்தித் தவிப்பதை ஓர்ந்திடலாம்! 23
செல்வம் படைத்தவன் சேயோ தனைமிகச்
சீருறக் காப்பவர் தோளிறங்கிச்
செம்மண் நிலத்தினில் ஆடி மகிழ்ந்திடச்
சிந்தை புரிந்திவண் ஏக்கமுறும்!
கொல்லும் வறுமையில் குன்றிக் குலைபவன்
கொண்ட மகவுயர் தோளமர்த்திக்
கொஞ்சி மகிழ்பவர் இல்லை எனக்கெனக்
கூவி அழுதுளம் வாட்டமுறும்!
நில்லா உலகினில் நிற்கும் வரையிலும்
நெஞ்சங் களித்திட வேட்டமுற்று
நேடிப் பொருளினை ஈட்டத் திரிபவன்
நித்தம் கவலையில் தோய்த்திடுவான்!
பொல்லா உலகினில் எல்லாம் மறைந்திடும்!
பொன்றி மறையுமுன் பல்பணிகள்
போற்றிப் பிறர்க்கே புரிய நினைப்பவன்
புக்க இடரிடை ஓயுகின்றான்! 24

இருந்தநிலை தனையிழந்து வறுமையுற்றே
இறப்புண்ட பொற்கொல்லன் பொன்னுசாமி
ஒருவனுடை வாழ்வினை நான் எடுத்துச்சொல்வேன்!
உருகிவரும் மனமுடையீர் ஊன்றிக்கேட்பீர்! 25

## ஏழ்மையில்...

மணிபுரியில் அழுதழுது மாலைசெல்ல
மகிழ்ந்திரவு மீன்களினால் சிரிக்கும்நேரம்!
அணிபுரியும் அருள்பூத்த நெஞ்சம்போல
அழகுநிலா ஒளிக்கொடைசெய் இனியவேளை!
பணிபுரியும் பாட்டாளி மேனியொப்பப்
பசுந்தரையில் பனிவேர்வை அரும்பும்போது...
பணிபுரியும் துவரடைந்த பொன்னுசாமி
பித்துற்ற மனத்தோடே தத்தளித்தான்! 26
அலைகின்ற குளத்தருகே அவனுட்கார்ந்தே
அணுவணுவாய்த் தேய்கின்ற உணர்வினோடே
குலைகின்றான்! குமைகின்றான்! குமறுகின்றான்!
கொந்தளிக்கும் கடல்பட்ட தோணியானான்!

கலைகின்ற ஓவியமா அவன்றன் வாழ்க்கை !
கரையானுக் கிரையாகும் கவிதையேடா !
உலைகின்ற நினைவுடனே மோதிமோதி
ஒருவழியும் அறியாது திகைத்தானேங்கி ! 27

இரண்டாண்டு முன்னர்த்தான் மணமுடித்தான் !
எழிலிருப்பாம் ஒருத்திதுணை பொருந்தப்பெற்றான் !
வறண்டுவரும் பயிர்தழைக்க வளைந்துவந்த
வானாற்றுப் புனல்போன்றால் அவன்பால்இன்பம்
புரண்டோடச் செய்தாள்நன் மகப்பூப்பூத்தாள் !
பொற்சிலையோ ! பளிங்குருவோ கழுகின்கூட்டம்
திரண்டிருக்கும் குடியிருப்போ எனமகிழ்ந்து
திளைத்திருவர் ஒருசேய்மேல் ஆவிவைத்தார் ! 28

வருவாயோ மிகக்குறைவு ! முன்னோர்சேர்த்து
வைத்ததெலாம் கடனென்றே ! என்றபோதும்
பெருகாத செல்வமைத்தான் ! ஒவ்வோர்காசும்
பேணிவைத்துக் கடனடைத்தான் ! மெல்ல!மெல்ல
உருவாகும் ஒளிவாழ்க்கை அரும்பக்கண்டான் !
ஒருவாறாய் இதுகாறும் கவலைவென்றான் !
திருவாகும் நன்மனையாள் வாய்ப்பென்றிங்குத்
திருக்குறளின் சொற்படியோர் செல்வன்அானன் ! 29

தடைபோட்டார் பொன்னகைக்கு ! திருமணத்தில்
தாலிக்கும் பொன்னில்லை ! கடனாய்வட்டிக்
கடைகளிலே பணம்வாங்க வைப்பதற்கும்
கைகளிலே பொன்னில்லை என்றயர்ந்தார் !
படையொழிந்து பகைவன்முன் நிற்பான்போலப்
பதைபதைத்தான் பொற்கொல்லன் பொன்னுசாமி
நடைபோட்டுத் தனையெதிரும் வறுமைகண்டு
நடுக்குற்றான் ! நன்னெஞ்சம் சிதைந்துபோனான் ! 30

ஒருநாளும் வெறுநாளாய்க் கழியாவண்ணம்
உழைத்துழைத்து வாழ்வின்பம் சிறிதேகண்டான் !
“வருநாளில் வேலையில்லை பொன்னுசாமி
வரவேண்டாம் கடைக்கினிமேல் என்றெரிக்கும்
பெருநெருப்பை முதலாளி, காதில்போடப்
பெருமூச்சும் கண்ணீரும் படபடப்பும்
பெருகிவரப் பேசாத சிலையாய்நின்றான்
பின்வீடு திரும்பிவந்து சாய்ந்தான்!தீய்ந்தான் ! 31

போயிற்று நாள்பறந்து ! கையிருப்பாம்
பொருள்மாதர் அழகிடைபோல் சிறுத்தழிந்து
போயிற்று ! தொழிலொன்றுங் கிடைக்கவில்லை !
போக்கொன்றும் அவன்நோக்கில் தெரியவில்லை !

நோயுற்றாள் அவன்மனையாள்! நோய்மறைந்து
நூறுமுறை வேளைதொறும் எண்ணிச்சேர்ந்தாள்!
சேயுற்ற சிறுபசிக்கும் உணவுகாணாள்
செய்வதென்னை எனநினைத்தாள்! நெஞ்சிருண்டான்! 32

குடியிருக்கும் வீட்டிற்கும் கூலிபாக்கி,
கோடாலிச் சொற்களினால் வீட்டுக்காரன்
விடியுமுனம் வந்துளத்தை வெட்டுகின்றான்!
விறகுக்கும் பாலுக்கும் பாக்கிவேறு!
படியேறித் தினந்தோறும் கடன்காரர்கள்
படையெடுப்பும் முற்றுகையும் செய்யலானார்!
அடிபட்டான்! இடிபட்டான்! அமைதியின்றி
ஆலையின்வாய்க் கரும்பானான்! கண்ணீர்சிந்தி! 33

எத்தனையோ எண்ணங்கள் எண்ணிஎண்ணி
இதயமெலாம் கனத்துவிட நிலைகுலைந்தான்!
பித்தனைப்போல் பெருமூச்சு, வெடிச்சிரிப்பு,
பிதற்றலுடன் ஒப்பாரி அழுகைதேம்பல்
இத்தனைக்கும் இடமானான்! இனிமேல்வாழ்வே
இல்லையென்னும் முடிவுக்கு முடுக்கப்பட்டான்!
செத்துவிடத் துணிந்துவிட்டான்! அந்தோ! அந்தோ!

செயலற்று மயக்கமுற்று மரணந்தன்னை 34
தழுவுவதற்கே விருப்புற்றான்! குளத்தில்காற்று.
தவழஎழும் சுழிப்பினிலே மனைவிகன்னம்
எழுகின்ற குழிப்புதனைக் கண்டான்! பின்னர்
இன்பத்தின் ஊற்றான தனதுசேயின்
முழுமதியாம் முகங்கண்டான் ஆம்பற்பூவின்
மலர்ச்சியிலே! முறுவலித்தான்! கண்ணே என்று
விழுந்திட்டான் குளத்தினிலே! பூவைநோக்கி
விரைந்தானப் பாசத்தில் பட்டான்! செத்தான்! 35

மகவணைத்த அவன்மனைவி துயரணைத்து
மனமிடிந்தாள்! புலம்பலுக்கு வாயளித்தாள்!
மிகப்பெருகும் நீருக்கே கண்கொடுத்தாள்!
மேனிதன்னை நோய்க்கூட்டந் தின்னத்தந்தாள்!
அகவுணர்வை அரிக்கின்ற இடர்ப்புழுக்கள்
ஆயிரத்திற் கவள்தீனி யாக்கிப்போட்டாள்!
தகவற்ற இருட்டினிலே சேற்றுப்பாதை
தனிலவளும் குழந்தையுடன் தவிக்கின்றாளே! 36

சின்னாட்கள் ஆனபின்னர் இந்தச்செய்தி
செய்தித்தாள் எழுத்தாளர் இதழில்சேர்ந்தார்!
அன்னதற்காய் வெகுமானம் ஏதோபெற்றார்!
ஆயினந்தக் குடும்பத்தின் வீழ்ச்சிக்காக

அன்புற்ற மனத்தாலும் இரக்கத்தாலும்
அருகுவந்தோர் உருகிநின்றார், உதவிசெய்தோர்
இன்றுவரை எவருமில்லை! பொன்னுசாமி
ஏன்செத்தான் எனவெண்ணிப் பார்த்தாரில்லை! 37

## தமிழன்னையின்...

மொழிகள் குலத்தினில் மூத்தவளாம்—அழகு
மொய்க்கும் கலைபல பூத்தவளாம்!
பழிப்பில் இலக்கியம் பொன்னணிகள்—நல்ல
பண்பார் இலக்கண மின்மணிகள்
செழித்த திருவுடன் பூண்டவளாம்!—எம்
செந்தமிழ்த் தாயெனும் மாண்புடையாள்!
வழியில் மணியென வண்டமிழர்—புகழ்
விரித்துப் பரவிய பண்புடையாள்! 38

முன்னம் முடிபுனைந் தாண்டிருந்தாள்—திரு
முற்றப் பொலிவெலாம் ஈண்டிடவே!
கன்னல் எனுஞ்சுவை பெற்றென்றும்—நற்
கருத்து மருந்தினால் பற்பலவாம்
இன்னல் மனப்பிணி போக்கிடுவாள்—தூய
இன்பம் பெருக்கியேத் தேக்கிடுவாள்!
அன்ன சிறப்புடைத் தாயவளும்—இங்கு
அழுது புலம்பியே ஓயுகின்றாள்! 39
என்றன் சிறம்பினைப் போற்றுவதாய்ப்பலர்
இங்குப் பறைதினம் சாற்றுகின்றார்!
துன்னும் புதுக்கலைச் செல்வமெல்லாம்—தினம்
தோன்றிச் சிறப்புடன் பல்கிடவே
முன்னி முயன்றிவண் நாடலின்றி—அது
முடியா தெனச்சிலர் ஆடுகின்றார்!
உன்னும் மனவலி அற்றவர்கள்—உடன்
ஓடிப் பிறமொழி பற்றுகின்றார்! 40

தெருவில் விளம்பரத் தூக்குகளில்—பிற
தேவ மொழிகளே ஆக்குகின்றார்!
வருந்திப் புலம்பியே வாடுவண்ணம்—இறை
வணங்கப் பிறமொழி தேடுகின்றார்!
பெருகும் திரைப்படக் காட்சிகளில்—இசை,
பேச்சில் பிறமொழி ஆட்சியந்தோ!
பொருந்து வழக்குரை மன்றினுளும்—இங்குப்
புக்குப் பிறமொழி நின்றதையோ! 41

வயிற்றுப் பிழைப்பினை உள்ளுவதால்—உயர்
மானஞ் சிறிதெனத் தள்ளுவதோ!

மயலார் பொருண்மகள் தோளினிலே—தன்
மனைவி மறந்தவன் வீழ்வதுபோல்
அயலார் மொழியினைக் கூடுகின்றார்—அதில்
ஆக்கம் பெறத்தினம் நாடுகின்றார்!
வயலில் எருமைகள் மேய்வதுபோல்—இங்கு
வந்து பிறமொழி மேயுதைய்யோ! 42

என்று பிறரென்னை ஏற்றிடவே—இவன்
ஏற்ற பணிகளை ஆற்றிடுவார்?
துன்னும் அறிவியல் நுண்கலைகள்—தினம்
தோன்றிட ஊன்றுவர் நன்முயற்சி?
என்று பிறமொழி ஆக்கமெலாம்—நான்
ஏற்கத் தகுவணம் சேர்க்குவரோ?
என்று தமிழனை என்புருக—மிக
இரங்கி அழுதனள்! அன்புடையீர்! 43

## முடிப்பு.....

அழுவதனால் அருள்வளரும்! அழுவதனால் நலம்பெருகும்
அழுவதனால் துயர்குறையும்! அழுவதனால் மனமொன்றும்!
அழுவதனால் அமைதிவரும்! அழுவதனால் திறம்பிறக்கும்!
அழவேண்டும் அதனாலே அளவோடே அவையீரே! 44

பலர்முனர் அழுதிடின் நெஞ்சில் படிந்திடும்
கலக்கமும் கவலையும் குறைதல் கருதியே
நலமிலாக் கவியினால் நானும் புலம்பினேன்!
உலப்பிலா அன்பினீர்! ஓய்ந்து நிறுத்தினேன்! 45

## வாழ்த்து...

என்னுடைப் புலம்பலை இதயத் தேம்பலை
அன்புடன் கேட்கவே அழைத்த அவையினர்!
முன்னமர்ந் திதுவரை மொய்த்துக் கேட்டவர்
இன்னவர் யாவரும் இனிது வாழ்கவே! 46

வாழிய செந்தமிழ்!

## மகிழ்ச்சி அறிவிப்பு.

கரந்தைப் புலவர் கல்லூரியினின்றும் 1964-ல் சென்னைப் பல்கலைக் கழகத்தேர்விற்குச் சென்ற மாணவர்களுள் வித்துவான் இறுதித் தேர்வில் ஒருவரைத் தவிர எல்லோரும் நன் முறையில் வெற்றி பெற்றுள்ளனர். வித்துவான் முதனிலையில் எல்லோரும் வெற்றி பெற்றுள்ளனர். வித்துவான் இறுதி நிலையில் நான்கு மாணவிகளுள் மூவர் முதல் வகுப்பிலும் ஒருவர் இரண்டாவகுப்பிலும் தேர்வுற்றனர்.